
# திருக்கோயில்



மே
1999

விலை
ரூபாய் ஐந்து

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்







சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள சி.வி. இராமசாமி சுற்றுப்புறக் கல்வி மையம் அதன் தலைமை அலுவலகத்தில் ''தென்னிந்தியாவின் புனிதத் திருக்குளங்கள்'' எனும் தலைப்பில் கருத்தரங் கினை நடத்தியது. இக்கருத்தரங்கில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணை யாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். நிலைய இயக்குநர் டாக்டர் நந்திதா கிருஷ்ணா அவர்களின் தலைமையில் இக் கருத்தரங்கம் சிறப்புற நடைபெற்றது.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு வைகாசி<br>மே 1999 | மணி 5 |



## சிறப்பாசிரியர்

**சுகவனேஸ்வர்**, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.,

## திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர் (பொறுப்பு)

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.


## முகப்பு

அருள்மிகு
பண்ணாரி மாரியம்மன்

## பொருளடக்கம்


*அருள்மிகு காளியம்மன் போற்றி*

*திருப்பரங்குன்றம்*
- *டாக்டர் த. அமிர்தலிங்கம்*

*பண்ணாரி அம்மன் - சில சிறப்புச் செய்திகள்*
- பேராசிரியர் முனைவர் கா. அரங்கசாமி

*இறைவனும் தமிழும்*
- பேராசிரியர் முனைவர் டி. செல்வராசு

*சித்திரா பௌர்ணமியும் சித்திரகுப்தப் பூசையும்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

*சிவராத்திரி புராணக் கதைகள்*
- *நடராசன் அடிமை*

*எல்லார்க்கும் தான் ஈசன்*
- டாக்டர் சிவப்பிரியா

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*நூல் மதிப்புரை*
- *அ. நிறைமதி*

*சிவனார் சூடியுள்ள பிறைநிலவினை அருணகிரிநாத சுவாமிகள்*
"பூரணமதான திங்கள்" எனப் பாடியிருப்பது ஏன்?
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

வினாவும் விடையும் - கௌமாரம்
- டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
*உயர்திரு ஆணையாளர் அவர்கள்*
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*
தொலைபேசி : 8279407

# அருள்மிகு காளியம்மன் போற்றி

## தமிழ் அர்ச்சனை - அருள் வேண்டுதல்
(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந் நன்னாளில் ........ அவர்களுக்கும் அவர்கள் குடும்பத் தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர் கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உம்திருவடிகளில் மலர்தூவி வழி பாடு செய்கின்றோம்.

## அருள்மிகு காளியம்மன் 8 போற்றிகள்

1. ஓம் அஞ்சுவட்டத்து அம்மனே போற்றி.
2. ஓம் ஆடல்கண்டருளிய அணங்கே போற்றி.
3. ஓம் ஒளிநிறமாகிய பொன்னி போற்றி.
4. ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி.
5. ஓம் தில்லையில் ஆடும் திருவே போற்றி.
6. ஓம் நெஞ்சின் அழுக்கெலாம் நீக்குவாய் போற்றி.
7. ஓம் வெற்றிவேல் தடக்கை கொற்றவை போற்றி.
8. ஓம் வேதத் தமிழே போற்றி போற்றி.

## அருள்மிகு காளியம்மன் 16 போற்றிகள்

1. ஓம் அஞ்சுவட்டத்து அம்மனே போற்றி
2. ஓம் அனைத்திலும் காரணம் ஆவாய் போற்றி
3. ஓம் கருணை வெள்ளக் கடலே போற்றி
4. ஓம் கற்பனை கடந்த சோதி போற்றி
5. ஓம் கால பைரவர் துணையே போற்றி
6. ஓம் கானகம் உகந்த காளி போற்றி
7. ஓம் குமரிப் பூசையில் குளிர்வாய் போற்றி
8. ஓம் சச்சிதானந்த நிலையமே போற்றி
9. ஓம் நடுநிசி உகக்கும் பைரவி போற்றி
10. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
11. ஓம் மங்கலம் அருளும் மகமாயி போற்றி
12. ஓம் முடியாத எல்லாம் முடிப்பாய் போற்றி
13. ஓம் யமனை நசிக்கும் யாமளை போற்றி
14. ஓம் யாதுமாகிய இறைவி போற்றி
15. ஓம் வெயில் [illegible]ழை உகக்கும் வெக்காளி போற்றி
16. ஓம் வேதத் தமிழே [illegible]ற்றி போற்றி.

## அருள்மிகு காளியம்மன் 108 போற்றிகள்

1. ஓம் அஞ்சுவட்டத்து அம்மனே போற்றி
2. ஓம் அண்டங்கள் வானில் அமைத்தாய் போற்றி
3. ஓம் அண்ட பிண்டம் அணைவாய் போற்றி
4. ஓம் அத்தனைப் பொருளிலும் நிற்பாய் போற்றி
5. ஓம் அநாகதச் சக்கரம் அமர்ந்தாய் போற்றி
6. ஓம் அலைமகள் கலைமகள் மலைமகள் போற்றி
7. ஓம் அனைத்திலும் காரணம் ஆவாய் போற்றி
8. ஓம் அன்பு வடிவாகிய அன்னையே போற்றி
9. ஓம் ஆதிசக்தியாய் அருள்வாய் போற்றி
10. ஓம் ஆலங்காட்டில் ஆடுவாய் போற்றி
11. ஓம் ஆனந்த கோசத்து அரும்புவாய் போற்றி
12. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
13. ஓம் உச்சயினியில் உதிப்பாய் போற்றி
14. ஓம் எழுநிறமாகிய பழையோள் போற்றி
15. ஓம் எழுவரின் இளைய மகளே போற்றி
16. ஓம் என்றும் புதிய எழிலே போற்றி
17. ஓம் ஒளிநிறமாகிய பொன்னி போற்றி
18. ஓம் ஓசை ஒலியெலாம் ஆனாய் போற்றி
19. ஓம் க.ஏ.ஈ.ல.ஹ்ரீம் என்றால் வரம் தருவாய் போற்றி
20. ஓம் க.ஏ.ஈ.ல, ஹ்ரீம் எனும் மந்திர வர்ணமே போற்றி
21. ஓம் க.ஏ.ஈ.ல, ஹ்ரீம் மந்திரக் கலையே போற்றி
22. ஓம் க.ஏ.ஈ.ல, ஹ்ரீம் மந்திர சித்தியே போற்றி
23. ஓம் க.ஏ.ஈ.ல. ஹ்ரீம் வடிவமே போற்றி
24. ஓம் கங்காள மாலை தரித்தாய் போற்றி
25. ஓம் கண்கள் ஆயிர பவானி போற்றி
26. ஓம் கதம்பப்பூ மாலையில் களிப்பாய் போற்றி
27. ஓம் கதம்பவன வாழ்வில் மகிழ்வாய் போற்றி
28. ஓம் கதலிவனத்துச் சுந்தரி போற்றி
29. ஓம் கந்தனைப் பெற்ற கருணையே போற்றி
30. ஓம் கபாலம் ஏந்தும் கமலா போற்றி
31. ஓம் கபிலை நிறத்துப் பார்வதி போற்றி
32. ஓம் கமலாலயம் நடுநிற்கும் காளி போற்றி
33. ஓம் கருதுவார் நெஞ்சில் காமதேனு போற்றி
34. ஓம் கருணை வெள்ளக் கடலே போற்றி
35. ஓம் கருமமும் தருமமும் காப்பாய் போற்றி
36. ஓம் கவனம் ஈர்க்கும் காரிகை போற்றி
37. ஓம் கவிதை விரும்பும் பூரணி போற்றி
38. ஓம் கலிகாலக் கற்பகத் தருவே போற்றி

39. ஓம் கற்பனை கடந்த சோதி போற்றி
40. ஓம் கற்பூரம் கலக்கும் கஸ்தூரி போற்றி
41. ஓம் கற்பூரம் அணியும் தாயே போற்றி
42. ஓம் கஸ்தூரிப் பொட்டில் ஒளிர்வாய் போற்றி
43. ஓம் கஸ்தூரிமானில் கலந்தாய் போற்றி
44. ஓம் க்ரீம் ஹ்ரீம் கல்யாணியே போற்றி
45. ஓம் க்ரீம் ஹ்ரீம் மந்திர மருந்தே போற்றி
46. ஓம் காசிக் கடவுள் கனவே போற்றி
47. ஓம் காசியில் அமர்ந்த காளி போற்றி
48. ஓம் காமகலாத் தியானக் காட்சி போற்றி
49. ஓம் காமகோட்டத்துக் காமாட்சி போற்றி
50. ஓம் காமமும் பற்றும் கனை [illegible]யாய் போற்றி
51. ஓம் காம ரூபமாய்க் கனிவாய் போற்றி
52. ஓம் காலபைரவர் துணையே போற்றி
53. ஓம் காலமும் கடந்த காரணி போற்றி
54. ஓம் காலனை வெல்லும் காலராத்ரி போற்றி
55. ஓம் காளையார் கோயில் சுவர்ணகாளி போற்றி
56. ஓம் குமரிப் பூசையில் குளிர்வாய் போற்றி
57. ஓம் கைவல்யம் கைகளில் காட்டுவாய் போற்றி
58. ஓம் கோகர்ணத்தின் குலக்கொடி போற்றி
59. ஓம் கோடி வடிவுடைக்கோசலை போற்றி
60. ஓம் கோலவிழி அம்மையாய்க் குலவுவாய் போற்றி
61. ஓம் சச்சிதானந்த நிலையமே போற்றி
62. ஓம் சடையன் உவக்கும் சடைச்சி போற்றி
63. ஓம் ச.த.ப. சக்தியைச் சார்வாய் போற்றி
64. ஓம் சித்திரை ஆதிரையில் சிறந்தாய் போற்றி
65. ஓம் சிவனுக்கும் தாய்ப்பால் அருளினை போற்றி
66. ஓம் சிவனார் சினமான பத்ரகாளி போற்றி
67. ஓம் சூருடைக் கானகம் உகந்தாய் போற்றி
68. ஓம் தட்சனைத் தகர்த்த நவகாளி போற்றி
69. ஓம் தமோ குணமாம் தனயை போற்றி
70. ஓம் தாமரைச் சிவப்புக் கண்ணி போற்றி
71. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
72. ஓம் திசையெலாம் நிறையும் திகம்பரி போற்றி
73. ஓம் தில்லையில் ஆடும் திருவே போற்றி
74. ஓம் துர்க்கை உருவான திரிசூலி போற்றி
75. ஓம் துவரைப்பதியின் பத்ரகாளி போற்றி
76. ஓம் தோல்வி அறியாத தோகை போற்றி
77. ஓம் நடுநிசி உகக்கும் பைரவி போற்றி
78. ஓம் நிராதார ஸாதார நிலையே போற்றி
79. ஓம் நீலநிறம் படைத்த பவானி போற்றி
80. ஓம் நெஞ்சின் அழுக்கெல்லாம் நீக்குவாய் போற்றி
81. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
82. ஓம் பஞ்சமகார பகவதி போற்றி
83. ஓம் படைத்துக் காத்து ஒடுக்குவாய் போற்றி
84. ஓம் பரணியில் தோன்றிய பரமே போற்றி
85. ஓம் பாவம் போக்கும் பவதாரணி போற்றி
86. ஓம் பிரம்மம் தொழில்படத்தூண்டுவாய் போற்றி
87. ஓம் பூதமும் பொறியுமாய்ப் பொலிந்தாய் போற்றி
88. ஓம் மங்கலமாகிய மகாராத்ரி போற்றி
89. ஓம் மங்கலம் அருளும் மகமாயி போற்றி
90. ஓம் மங்கலமரபுடை மதுரகாளி போற்றி
91. ஓம் மனம் விழை வடிவாய் வருவாய் போற்றி
92. ஓம் மாகாளரின் மனைவி மாகாளி போற்றி
93. ஓம் மாயா என்னும் மோகினி போற்றி.
94. ஓம் மாற்றம் புரியும் காலராத்திரி போற்றி
95. ஓம் முடியாத எல்லாம் முடிப்பாய் போற்றி
96. ஓம் முப்புரம் எரித்த முதலே போற்றி
97. ஓம் முயற்சியின் சக்தியாய் முளைப்பாய் போற்றி
98. ஓம் யமனை நசிக்கும் யாமளை போற்றி
99. ஓம் யாதுமாகிய இறைவி போற்றி
100. ஓம் யாவும் வசப்பட வைப்பாய் போற்றி
101. ஓம் யோகக் குலத்தில் இணைவாய் போற்றி
102. ஓம் யோகக் குலம் விரும்பும் யோகினி போற்றி
103. ஓம வங்கக் காளியாய் வாழ்வாய் போற்றி
104. ஓம் வஞ்சகர் உயிர் அவி உண்பாய் போற்றி
105. ஓம் வீரம் உக்கும் விசையே போற்றி
106. ஓம் வெயில் மழை உகக்கும் வெக்காளி போற்றி
107. ஓம் வெற்றிவேல் தடக்கை கொற்றவை போற்றி
108. ஓம் வேதத் தமிழே போற்றி போற்றி.

**பாடல் அருள்மிகு காளியம்மன்**

பயிரவி! பஞ்சமி! பாசாங்குசை! பஞ்சபாணி!
வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி! காளி!
ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வாராகி
என்றே
செயிரவி நான்மறைசேர் திருநாமங்கள்
செப்புவரே.

***- அபிராமி அந்தாதி***

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**

……. அம்மனின் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்கலம் உண்டாகுக.

★★★

# திருப்பரங்குன்றம்

- டாக்டர் த. அமிர்தலிங்கம்

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச் சோலை இவை ஆறும் ஆறுமுகன் உகந்த ஆறு திருத்தலங்கள் ஆகும்.

'ஆறு திருப்பதியில் வளர் பெருமானே' என்று அருணகிரிநாதரும் 'ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடி கொண்டோனே' என்று குமரகுருபரரும் போற்றியுள்ளனர்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் போற்றிய ஆறுதிருத்தலங்கள் என்பதால், அவ்வாறு திருத்தலங்களும் ஆற்றுப்படைத் தலங்கள் என அழைக்கப்பட்டு பின் அவை மருவி 'ஆறு படைத் தலங்கள்' 'ஆறுபடைகள்' என அமைந்ததாக தமிழ் அறிஞர் பெருமக்கள் விளக்கம் கூறுகின்றனர்.

படைவீடு என்ற சொல், பகைவர்களுடன் போர்புரியும் பொருட்டுத் தளபதி ஒருவன் படைகளுடன் சென்று தங்கியிருக்கும் இடத்தைக் குறிப்பதாகும். முருகப் பெருமான் சூரபதுமனுடன் போர் புரியச் சென்று தங்கியிருந்த படை வீடு, திருச்செந்தூர் ஒன்றேயாகும். ஆயினும் ஏனைய திருத்தலங்களும் படை வீடுகள் என அழைக்கப்படுவதற்குக் காரணம் முருகாற்றுப் படையில் நக்கீரர் முன்னிலைப்படுத்திய திருத்தலங்கள் இவை என்பதாலேயே 'ஆற்றுப்படைத் தலங்கள்' என ஆகி ஆறு படைத்தலங்கள் எனச் சுருங்கின என்று அறிஞர் பெருமக்கள் கூறும் விளக்கம் அறிவிற்குப் பொருந்தக் கூடிய அரிய விளக்கமே ஆகும்.

எனினும் அடியார்களுக்குப் பகையாவன காமம், மோகம், லோபம், குரோதம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு தீய குணங்களாகும். இவ்வாறு பகையை வென்று அடியவர்களைக் காக்கும் பொருட்டு முருகன் தங்கியிருக்கும் படை வீடே அவன் திருக்கோயில்கள் என்று கொள்வதில் யாதொரு தவறும் இல்லையல்லவா! ஆகவே தான், அடியவர்களுக்கு வேண்டியவாறே அருளும் பழமையும் பெருமையும் வாய்ந்த அவன் ஆறு திருத்தலங்கள் ஆறு படை வீடுகள் என்று சிறப்பிக்கப் படுகின்றன.

இனி கந்தப் புராணக் கதை நிகழ்ச்சியின் படி பார்க்கப் போனால் சூரபதுமன் உள்ளிட்ட அரக்கர்களை சம்ஹாரம் செய்து முருகன் கோயிற் கொண்ட முதல் திருத்தலம் திருச்செந்தூரேயாகும். அவ்வாறிருக்க திருச்செந்தூர் இரண்டாம் படை வீடு எனவும், திருப்பரங்குன்றம் முதற்படை வீடு எனவும் போற்றப்படுவதற்கு ஏதேனும் சிறப்புக் காரணமும் இருக்கவே செய்யும் என்பதும் உணரத் தக்கது.

அக்காரணம் என்ன என்பதை நாம் காண்பதற்கு முன்னால் முருகனின் முதற்படை வீடான இக்குன்றிற்கு 'பரங்குன்று' எனப் பெயர் வந்த காரணத்தை நாம் முதலில் தெரிந்து கொள்வோம்.

பன்னெடுங்காலத்திற்கு முன்னால் - பாவிகளான சூரபதுமன், சிங்கமுகன், தாருகாசூரன் முதலான அரக்கர்களை மாய்க்க திருமுருகர் திரு அவதாரம் புரிவதற்கும் முன்னால் நிகழ்ந்த ஒரு வரலாறு இது.

ஆதிசேடனுக்கும், வாயுக்கடவுளுக்கும் ஆதியிலிருந்து ஒரு கருத்துப் போர் நிகழ்ந்த வண்ணம் இருந்தது, பூபாரம் முழுதும் தாங்கும் நானே வலிமை மிக்கவன் என்று தர்க்கம் புரிந்தான் ஆதிசேடன். 'இல்லை இல்லை ஊழிக் காற்றாய் நான் மோதினால் நிலைகெட்டு வலியொடுங்கித் தோற்றுப் போவாய்' என்று வீரம் பேசினான் வாயுக் கடவுள்.

கருத்து முரண் கொண்ட இருவரும் ஒரு மோது போருக்கும் தயாராகி விட்டார்கள். மகாமேரு மலையின் சிகரங்களை ஆதிசேடன் தன் படங்களால் மூடிக் கொள்ள, மேருவின் சிகரங்களைப் பிளந்தெறிய முயன்றான் வாயு.

இறுதியில் தன் முயற்சியால் வெற்றி கண்ட வாயு, மேருமலையின் ஒரு சிகரத்தைப் பறித்துத் தென்திசை நோக்கி வீசி எறியப் பாண்டிய நாட்டில் வந்து அச்சிகரம் விழுந்து நிலை பெற்றது.

மதுரைக்குத் தென் மேற்கே ஐந்து மைல் தூரத்தில் வந்து விழுந்தது வாயுவால் வீசி எறியப் பட்ட 'சத்திய சிருங்கம்' எனும் அச்சிகரம்.

சுமார் 300 அடி உயரம் கொண்ட இச்சிகரம் சிவலிங்க வடிவிலேயே தோற்றம் அளிப்பதால் சிவ பெருமானே குன்றுருவில் காட்சியளிப்பதாகக் கருதி மக்கள் 'பரன்குன்று' என்றே பண்டுதொட்டு அழைத்து வந்தனர்.

இப்பரன்குன்றிற்குப் பராசர சேத்திரம் என வழங்கி வரும் மற்றொரு பெயரும் இங்குச் சிந் திக்கத்தக்கதாகும்.

வசிட்ட முனிவரின் பேரர் பராசர முனிவர். இவருக்குத் தப்தர், அனந்தர், நந்தி, சதுர் முகர், சக்ரபாணி, மாலி என்று புதல்வர்கள் அறுவர் ஆவர்.

நீராடும் போது பொய்கையில் இருந்த மீன் களைப் பிடித்து அருகிலிருந்த பாறையில் போட்டு அவை துள்ளித் துடிப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்ட அத்துட்ட பிள்ளைகளின் அருளற்ற செய லைக் கண்டு பராசரர் மனம் பதைபதைத்தார். தம் மக்கள் என்றும் பாராமல் 'நீங்களும் மீன்களாகுங் கள்' என்று சாபம் கொடுத்துவிட்டார்.

'தந்தையே! மக்கள் என்றும் பாராது சபித்து விட்டீர்களே? எங்கள் பாவத்திற்கு விமோசனம் இல்லையா!' என்று முனிவரின் பிள்ளைகள் வேண்ட 'முருகக் கடவுள்தோன்றி இந்தச் சரவணப் பொய் கைக்கு வருவார். அன்னை உமை கந்தனுக்கு வழங்கும் பால் இப்பொய்கையில் சிந்தும்போது அதனை அருந்தி நீங்கள் சுயவடிவம் பெறுவீர் கள்' என்று சாபவிமோசனம் தந்தார் பராசரர்.

அசுரர்களின் தொல்லை தாளமுடியாத திரு மால், நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் கயிலை மலை சென்று கண்ணுதற் கடவுளை வழி பட்டுப் பிரார்த்தித்தார்கள்.

''எம்பெருமானே! சூரபதுமனாதி அசுரர் களால் பெருந்துயர் உறுகிறோம்' எங்களை இத் துயரத்திலிருந்து விடுவிக்க உமக்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தந்தருளுங்கள்.'

சிவபெருமானாரும் ஸத்யோஜாதம், வாம தேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் எனத் தமக்கு வெளிப்படத் தெரியும் ஐந்து முகங்களோடு பரம ஞானியரின் உள்நோக்கிற்கு மட்டும் புலப்படும் உள்முகமான அதோமுகத்தையும் கொண்டு ஆறு முகங்களிலிருந்து ஆறு அனல் பொறிகளைத் தோற்று வித்தார்.

ஆறு அக்கினிப்பொறிகளும் இறைவன் ஆணைப்படி அவர் திருமுன் நின்றன. வாயு தேவன் தீப்பொறிகள் ஆறையும் தன் சென்னிமேல் தாங்கிச் சென்றான். பிறகு அக்கினிதேவன் தன் சென்னி மேல் அக்கினிப் பொறிகளைத் தாங்கினார். இரு வரும் மாறி மாறித் தாங்கிச் சென்று கங்கையில் சேர்த்தனர். கங்கை அவ்ஆறு அனல் பொறிகளை சரவணப் பொய்கையில் கொண்டு சேர்க்க, ஆறு குழந்தைகளாக முருகப்பெருமான் திரு அவதாரம் செய்தார்.


கார்த்திகை மகளிர் அறுவரும் ஆளுக்கொரு குழந்தையை எடுத்துப் பாலூட்டினர். கார்த்திகை மாதர்கள் ஆறுருவான முருகரைப் போற்றி வளர்த்து வந்தனர்.

சிவபெருமானுடன் சிவகுமாரனைக் காண வந்த உமாதேவியார் அந்தக் குழந்தைகள் ஆறினை யும் அள்ளியெடுத்தார். அப்படி வாரி எடுத்ததும் ஆறு குழந்தைகளின் உடல்களும் ஒரே உடலாக மாற முகங்கள் மட்டும் ஆறாக நின்றன. தேவர்கள் பூமாரி பொழிந்து உமா தேவியாரால் ஒருருவம் ஆக்கப் பட்டவர் என்ற பொருளில் 'கந்தர்' எனத் திரு நாமம் வழங்கி முருகரைப் போற்றினார்கள்.

நவமணிக் கிண்ணத்தில் ஞானப்பால் பார்வதி வழங்கிட, முருகவேள் அருந்தினார். சர வணப் பொய்கையில் சிந்திய ஞானப்பாலை அருந்தி யதும் சாபம் நீங்கி, மீன்கள் ஆறும் ஆறுமுனிவர் களாக வடிவம் கொண்டு சிவபெருமானைத் துதித்தனர். 'நீங்கள் பரங்குன்றம் சென்று தவம் செய்து கொண்டிருங்கள், விரைவில் நம் குமரன் அங்கு வந்து உங்களுக்கு அருள் செய்வான்' என்று திரு வாய் மலர்ந்தருளினார் சிவபெருமான்.

பராசர முனிவரின் ஆறு குமாரர்களும் சிவ பெருமான் திருவருளின் வண்ணம் தங்கியிருந்து தவம் புரிந்த திருத்தலம் என்பதால் தான் பரங் குன்றிற்குப் பராசர சேத்திரம் என்பதும் ஒரு பெய ராகும். சூரபதுமனாதி அரக்கர்களைச் சம்ஹாரம் செய்த முருகக் கடவுள் திருப்பரங்குன்றிற்கு எழுந் தருளியபோது ஆறுமுகக் கடவுள் அவ்வறுவருக் கும் ஞானோபதேசம் புரிந்தருளிச் சிறப்பித்தார்.

தம் பகைவனை அழித்துப் பொன்னுலக அரசைத் தமக்கு மீட்டுத் தந்தருளிய முருகப் பெரு மானுக்குத் தம்மகள் தெய்வயானையைத் திருப் பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொடுக்க விழைந் தான் தேவேந்திரன்.



சிவபெருமான் உமாதேவியாரோடு கணங்கள் சூழ எழுந்தருளினார். திருமால், நான்முகன் ஆகியோர் முருகக்கடவுளைத் திருமணத்திற்கு எழுந்தருள வேண்டினர். தேவதச்சன், திருப்பரங்குன்றத்தில் திருமண மண்டபத்தையும் விருந்தினர் மண்டபங்களையும் அமைத்துத் தந்தான்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முருகப் பெருமான் - தெய்வானை திருமணக் காட்சி கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

உலகமாதாவான உமாதேவியார் முருக வேளையும் தெய்வயானையாரையும் ஓர் சிறந்த பொன்னாசனத்தில் அமர்த்தினார். அவர்கள் திருமணக் கோலம் கண்டு இந்திரனும் வானோரும் ஏனோரும் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். இந்திராணி திருமஞ்சன நீரை வார்க்க இந்திரன் முருக வேள் திருவடிகளைப் பூசித்தான். மலர்களைச் சூட்டித் தூபதீபம் பணித்தான்.

எம்பெருமானுக்குப் பூசைகள் முடித்து இந்திரன் தெய்வயானையின் திருக்கரத்தை கந்தவேளின் திருக்கரத்தில் வைத்து 'எளியேனுடைய மகளை ஏற்றருள்வீர்' என்று வேதமந்திரம் கூறித் தாரை வார்த்தான். பிரமதேவர் மாங்கல்ய நாணை மனத்தினால் படைத்துக் கொடுக்க முருகப் பெருமான் தம் திருக்கரத்தினால் வாங்கி தெய்வயானையின் கழுத்தில் அணிவித்தார். மலர்மாலையும் சூட்டினார். தீ வலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலிய சடங்குகள் யாவும் இனிதே நடந்தன.

முருகக் கடவுளும் தெய்வயானையும் பார்வதி பரமேசுவரர்களை வலம் வந்து திருவடி பணிந்து வணங்கினர். ஆதிதம்பதிகளான சிவனும் சக்தியும் இப்புது தம்பதிகளுக்கு 'எங்களுடைய முதன்மையை உங்களுக்குக் கொடுத்தோம்' என்று ஆசி கூறினார்கள். சிவபெருமானையும் உமையம்மையையும் ஒருங்கு வழிபடுவது எவ்வளவு சிறந்ததோ அவ்வளவு சிறப்பானது தெய்வயானையையும் முருக வேளையும் திருப்பரங்குன்றத்தில் வழிபடுவது ஆகும். முருகனுக்கும் தெய்வயானைக்கும் தம்முடைய முதன்மையைத் தந்தருளிய திருத்தலம் என்பதாலே திருப்பரங்குன்றம் ஆறுபடை வீடுகளுள் முதல்படை வீடாகப் போற்றப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

'மலைமடந்தையும் இறைவனும்
மைந்தர்க்கும் மகட்கும்
தலைமை செய்தருள்
புரிதலும்'

என்ற தனிப் பெருஞ்சிறப்பு நடைபெற்ற திருத்தலம் திருப்பரங்குன்றம் என்று போற்றுகின்றது கந்த புராணம்.

இனி திருமுருகாற்றுப்படை பாடிய சங்கப் புலவர் நக்கீரர் மதுரையில் பிறந்து வளர்ந்தவர் என்பதால் தாம் அனுதினம் வழிபட்டுப் போற்றிய திருப்பரங்குன்றத்தையும் தம்மைப் பெருந்துயரிலிருந்து காப்பாற்றிய திருப்பரங்குன்றத்து முருகப்

பெருமானையும் முதன்மைப்படுத்திப் பாடியதில் என்ன வியப்பிருக்க முடியும்?

'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று ஆலவாய்ப் பெருமானோடு தர்க்கம் புரிந்த மாபெரும் புலவரான நக்கீரர் உற்ற இடர்ப் பாடும் அதைத் தீர்த்தருளிய திருமுருகன் பெருமை யும் இங்கு நாம் சிந்தித்தும் வந்தித்தும் போற்றிட வேண்டியவொன்றாகும்.

சோமசுந்தரக் கடவுளோடு வாதிட்ட தம் பாவம் தொலைய திருப்பரங்குன்றம் வந்து தவம் புரிந்தார் சங்கப் புலவர்களில் தலைமைப் புலவரான நக்கீரர். திருப்பரங்குன்றத்தில் ஒரு குளக்கரையில் அரச மரத்தினடியில் நக்கீரர் அமர்ந்து சிவபூஜை செய்த பொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அரச மரத்திலிருந்து உதிர்ந்த ஓரிலை தண்ணீரில் பாதி யும் தரையில் பாதியாகவும் விழுந்தது. நீரில் விழுந்த பாகம் மீனாகவும், நிலத்தில் விழுந்த பாகம் பறவை யாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுத்தன. இந்த விநோதக் காட்சியைக் கண்ட நக்கீரரின் சிவ பூஜை தடைப்படவே கற்கிமுகி என்ற பூதம் அவரைப் பிடித்து மலைக் குகையில் சிறை வைத்துவிட்டது.

ஏற்கனவே 999 பேர் அப்பூதத்தால் குகை யில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். ஆயிரம் பேர் சேர்ந்தவுடன் அனைவரையும் ஒன்றாக விழுங்க வேண்டும் என்று பூதம் எண்ணியிருந்தது. இப் போது நக்கீரர் சிறைபிடிக்கப்பட்டவுடன் 'பூதத் திடமிருந்து இனி மீள முடியாது' என்று துடித் தனர் அவர்கள். தம்மையும், பூதத்திடம் ஏற்கனவே சிறைபட்டிருந்த பிறரையும் பூதத்தின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று திருப்பரங்குன்றத்து முருகனை வேண்டி அப்போது நக்கீரர் பாடியது தான் திருமுருகாற்றுப்படை எனும் அற்புத இலக்கிய மாகும்.

நக்கீரர் 'திருமுருகாற்றுப்படை' பாடி முருகனை வேண்ட, முருகப்பெருமான் தம் கை வேலை ஏவினார். சூரன் உரம் கிழித்த வீரவேல் வெற்றிவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேல் கற்கிமுகியை வதைத்து மலைக்குகையைப் பிளந்து சிறைப்பட்டிருந்த அனைவரையும் விடுதலை செய்து விட்டது.

இவ்வரலாற்றையும் நக்கீரர்

குன்றம் எரிந்ததுவும் குன்றப்போர் செய்ததவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னை
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில்
காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்'

என்று பாடியிருக்கின்றார்.

நக்கீரர் அருள்பெற்ற இவ்வரலாற்றை அருணகிரிநாதர்

பழுத்தமுது தமிழ்ப்பலகை
இருக்குமொரு கவிப்புலவன்
இசைக்கு உருகி வரைக்குகையை
இடித்து வழி காணும்'

என்று குறிப்பிட்டுப் போற்றியிருக்கிறார்.

திருப்பரங்குன்றத்தில் நக்கீரர் தவம் செய்த 'பஞ்சாட்சரப் பாறை' எனும் இடத்தை இன்றும் நாம் சரவணப் பொய்கைக்கு அருகில் கண்டு மகிழலாம். அங்கு நக்கீரருக்கு ஒரு ஆலயமும் பின்னாளில் அமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டில் இருந்து வரு கின்றது. நக்கீரரை முருகப்பெருமான் குகையி லிருந்து காப்பாற்றியதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவை யொட்டி வேலாயுதத்தை மலையுச்சிக்குக் கொண்டு செல்லும் விழா இத்திருத்தலத்தில் நடைபெற்று வருகிறது.

திருப்பரங்குன்றத்துக் கோயில் கடைச்சங்க காலத்திலேயே பாண்டியமன்னர்களால் பாறை களைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலுமாகும். முருகர் தெய்வயானைத் திருமணக் காட்சியே பாறையைக் குடைந்த குடைவரைச் சிற்பமாகக் கர்ப்ப கிரகத்தில் அமைக்கப்பட்டு வழி பாடு நிகழ்ந்து வருகின்றது.

கர்ப்பகிரகத்தில் காணப்படும் பெரிய பாறை யின் நடுப்பகுதியில் மகிசாசுரமர்த்தினியைக் கண்டு வணங்குகிறோம். அதனையடுத்து வேலவரான முரு கப் பெருமானின் திருமணக் கோலத்தைக் கண்டு மகிழலாம். இதே பாறையின் மேற்கில் தாமரை மலர்மேல் கரும்பும், கனியும் ஏந்தியுள்ள கற்பக விநாயகரையும் வணங்கலாம். கோயிலின் கொடி மரத்தின் முன் புறம் மயில், நந்தி, மூசிகம் ஆகிய மூன்று வாகனங்களும் ஒருங்கு அமைந்துள்ளது இந்தத் தலத்திற்குரிய தனிவிசேடமாகும்.

முருகப் பெருமானின் திருப்பாதத்திற்கு அடியில் முருகனின் வாகனங்களான மயில், ஆடு, யானை ஆகிய மூன்றையும் ஒரு சேரக் கண்டு களிக்கலாம். தெய்வானையை வளர்த்த இந்திரனின் யானையாகிய ஐராவதம் திருமணத்திற்குப் பின் தெய்வானையைப் பிரிய மனமின்றி திருப்பரங்குன்றத்திலேயே தங்கி விட்டதாகக் கூறுகின்றனர்.

மூலவரின் திரு உருவம் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டிருப்பதால் அபிசேகங்கள் எல்லாம் முருகன் தன் திருக்கரத்தில் கொண்டுள்ள வேலுக்கே நடைபெறுகின்றன.

மூலவர் முருகரின் சந்நிதிக்கருகே மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயிலில் திருமால் மகாலட்சுமியுடனும் மதங்க முனிவருடனும் காட்சியருளுகிறார். கற்பக விநாயகருக்கு அருகிலுள்ள குடைவரைக் கோயிலில் சத்யகிரீஸ்வரர் என்ற திருநாமத்துடன் சிவபெருமான் சிவலிங்க வடிவில் காட்சி தருகிறார். ஆகவே திருப்பரங்குன்றம் சென்றால் முருகர் தெய்வானை திருமணத்தைக் கண்டு களிக்கும் பேரானந்தத்தோடு, மற்ற தெய்வங்கள் அனைவரையும் வழிபட்ட மனநிறைவையும் அடியவர்கள் பெறுவது திண்ணம்.

திருப்பரங்குன்றத்தில் ஒன்பது தீர்த்தங்கள் சிறப்புற்று விளங்குவதாகத் திருப்பரங்கிரி புராணம் கூறுகிறது. இவற்றிலும் சரவணப் பொய்கை, பிரம கூவம், சத்திய கூவ தீர்த்தம் ஆகிய மூன்று தீர்த்தங்களும் மிகச் சிறப்பானவையாகும்.

முருகன் தன் வேலாயுதத்தால் நிலத்தைக் கிழிக்க உண்டான தீர்த்தமே சரவணப் பொய்கையாக விளங்கி வருகிறது. சிவபெருமான் உமாதேவிக்குப் பிரணவ மந்திரத்தை உரைத்த போது, மடியில் வீற்றிருந்த முருகரும் அவ்வுபதேசித்தை உளம் கொண்டாராம். குருமுகமாக அறிய வேண்டிய மந்திரத்தை வேறுவகையில் மறைந்திருந்து கேட்பது போல் முருகர் கேட்டுணர்ந்தது குற்றம் என்று திருவுளம் கொண்டாராம் சிவபெருமான்.

அக்குற்றம் தீரவே பரங்குன்றம் வந்து மூன்றாண்டுகள் முருகர் தவம் புரிந்தார் என்றும், அப்போது தம்கை வேலால் சரவணப்பொய்கையை முருகப்பெருமான் உண்டாக்கினார் என்றும் திருப்பரங்கிரி புராணம் கூறுகின்றது. முருகப்பெருமானின் தவத்தைப் போற்றி தைப்பூச நன்னாளில் பார்வதி சமேதராய்ப் பெருமான் இடபவாகனத்தில் காட்சி தந்து ஆசி வழங்கினார். முருகப்பெருமானால் வணங்கப்பட்ட ஈசனும், ஈசுவரியும் பரங்கிரிநாதர், ஆவுடையநாயகி எனப் பெயர் கொண்டு இத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளனர். தற்பொழுது சந்நிதி வீதியில் மீனாட்சி சுந்தரேசுவர் ஆலயம் எனும் பெயரில் அந்த ஆலயம் விளங்கி வருகின்றது. முதலில் பரங்கிரிநாதரையும், ஆவுடைய நாயகியையும் வணங்கி வழிபட்ட பின்னரே முருகனின் ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும் என்று ஐதீகம் இங்கு நிலவி வருகிறது.

முருகப் பெருமானுக்கு சிவபெருமான் காட்சி வழங்கிய நன்னாள் தைப்பூசம் ஆதலால் இவ்வாலயத்தில் தைப்பூசவிழா பத்து நாட்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பிரமன் இத்திருப்பரங்குன்றத்தில் உண்டாக்கிய தீர்த்தம் பிரமகூவ தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகிறது. இத்தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டே பிரமதேவன் வெள்ளைக்கிளி போன்ற கலைமகளை மணம் புரிந்து கொண்டான் என்று தலபுராணம் கூறுகிறது.

வாய்மை அன்றி பொய்ம்மை ஒரு போதும் பேசி அறியா அரிச்சந்திரன் இத்திருப்பரங்குன்றத்தில் உள்ள சத்திய கூவத்தில் நீராடி முருகனை வழிபட்ட புண்ணியம் காரணமாகவே அத்தகைய பெருமை பெற்றான் என்றும் தலபுராணம் கூறுகிறது. சிபி சக்கரவர்த்தி இத்திருப்பரங்கிரி திருத்தலத்தில் தூகி பூதானம் செய்து புண்ணியம் பெற்றுள்ளார், ஆயிர பேருக்குப் பூதானம் வழங்க முற்பட்ட போது, ஒருவர் குறைய, மனம் வருந்திய சிபியின் வருத்தம் தீர, சிவபெருமான் திருப்பரங்குன்றத்துப் பரமேசுவரராகத் தோன்றி அருள்பாலித்ததாகவும் தலபுராணம் கூறுகின்றது.

புரூரவசு, மாந்தாதா, நளன், முசுகுந்தன் ஆகியோரும் திருப்பரங்குன்றம் அமர்ந்த செவேள் பரஞ்சுடரைப் போற்றி வழிபட்டதாகத் தலபுராணம் போற்றுகின்றது.

திருப்பரங்குன்றம் அன்றும் இன்றும் என்றும் செந்தமிழ்வாணர்கள் இன்னிசை மலர்களால் அர்ச்சிக்கும் அற்புதத் திருத்தலமாக விளங்கி வருகின்றது.

'யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால்
அருளும் அன்பும் அறனும்''

என்று பரிபாடலில் கடுவன்இளவெயினனார் என்ற புலவர் முருகன் திருவருளே வேண்டும்

எனப் பாடியிருப்பது ஈண்டு நாம்நினைந்து மகிழத்தக்கது.

உமையிடம் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரும், தம்பிரான் தோழரான சுந்தரரும் தேவாரத் திருப்பதிகங்களில் இத்திருப்பரங்குன்றத்தைப் போற்றிப் பாடியுள்ளனர்.

"பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன்
பாதம்
கரங்கூப்பிக் கணகுளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப்
படையைப்
பூசையாக் கொண்டு புகல்"

என்று புலவர்கள் போற்றும் திருப்பரங்குன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை சென்று வழிபடுதல் மிகவும் சிறப்பு என்பதால் ஒவ்வொரு ஞாயிறும் கிருத்திகை முதலான விசேட நாட்களிலும் ஆயிரமாயிரம் அடியார்கள் சென்று வழிபட்ட வண்ணமாக உள்ளார்கள்.

இருநூறு ஆண்டுகளுக்குமுன் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற ஒரு அதிசயமாகும் இது. திருமுருகன் திருநாமத்தை ஓதுவதிலும் திருமுருகர் - தெய்வயானையாரை வழிபட்டு வணங்குவதிலும் தீவிர ஆர்வம் காட்டி வாழ்ந்து வந்திருக்கிறார் ஒரு அம்மையார். எந்த நேரமும் கோயில், வழிபாடு என்று வாழ்ந்து வந்த அம்மையார்மேல் அவர் கணவன் ஐயமுற்று அவரது கரங்களில் ஒன்றைத் துண்டித்துத் தண்டித்து விட்டான். 'முருகா' என்று அம்மையார் அழைத்தவுடன் முருகன் அருளால் வெட்டுப்பட்டகரம் உடனே வளர்ச்சி பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன.

'அரிவை முருகா என்றழைக்கு முன்னே வந்து
கரம் உதவிநின்ற கருணைப் பெருந்தேவே'

என்று இவ்வற்புத நிகழ்ச்சியைப் பாடியுள்ளார் சிதம்பர சுவாமிகள்.

அடியார்கள் மனமுருகி அழைத்தவுடன் ஓடி வந்து அருள்பாலிக்கும் திருப்பரங்குன்றத்து முருகனை இந்துக்கள் மட்டுமின்றி இசுலாமிய மக்களும் பெருமளவு வந்து வழிபட்டு வணங்குகின்றனர். திருப்பரங்குன்றத்து மலை உச்சியில் முருகப்பெருமான் மேல் பக்திப் பூண்டு வாழ்ந்த சிக்கந்தர் பாட்சா என்ற முஸ்லீம் மகானின் சமாதியும் இருக்கிறது. இந்துக்களும் முஸ்லீம்களும் சமரசபாவத்துடன் சேர்ந்து வழிபட்டு வருவதால் திருப்பரங்குன்றம் இந்து முஸ்லீம் ஒற்றுமைத் திருத்தலம் ஆகவும் விளங்கி வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திரத் தின்போது பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு முருகர் தெய்வானை திருமணமும் பங்குனி உத்திரத்தின்போது மிகச்சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

முருகப்பெருமான் மணக்கோலத்தில் மணவாளப் பெருமானாக விளங்கித் தன் அடியவர்க்கு வற்றாத செல்வ வளங்களை வாரி வழங்கி வருகின்றான். திருமணத்திற்குச் சிறப்பு விருந்து ஆகும். திருமணக் கோலம் கொண்ட திருப்பரங்குன்றத்தில் அடியவர்க்கு அன்னதானம் வழங்கும் வைபவம் மிகச் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது. இத்தலத்தில் அன்னதானம் செய்தால் தீரா நோய்கள் யாவும் தீர்ந்து திருமுருகன் அருளால் மக்கட் செல்வமும் மனையறச் செல்வமும் பெருகி வளரும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

சந்தத்தமிழ்க் கவிராஜரான அருணகிரி நாதர் இத்தலத்தில் முருகவேளை உருகி வழிபட்டு எண்ணற்ற திருப்புகழ் பாடல்களைப் பாடியிருப்பார். ஆனால் நமக்கு இப்போது கிடைத்திருப்பதோ பதினாறு பாடல்கள்தான். பரங்குன்றத்து முருகனைக் கும்பிட்டால் பதினாறு பேறுகளும் வாய்க்கும் என்பது திருவருட் குறிப்பு ஆகும்.

ஆறிரு தடந்தோள் வாழ்க!
ஆறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

★★★

# பண்ணாரி அம்மன் - சில சிறப்புச் செய்திகள்

- பேராசிரியர் முனைவர் கா. அரங்கசாமி, எம்.ஏ. எம்.ஃபில்; பிஎச்டி.

## முன்னுரை

''மான்படுகாடு, தேன்படுவரை, மீன்படு சுனை பொன்படு குட்டம்'' என்று கொங்கின் இயற்கை வளத்தைக் கல்வெட்டுக்கள் ஓவியப்படுத்தும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இனக்குழுக்குடியாட்சியாகிய ஊராட்சியில் - நாட்டாட்சியில் - புகழ்பெற்றது கொங்கு. உலகின் வணிக மையமான கொடுமணல் கொண்டதும் கொங்கு நாடே. அத்துடன் மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட நொய்யல் நாகரிகம் இம்மண்ணுக்குரியதே, வணிகக் குழுக்களின் எறிவீரப் பட்டணங்களும் அடிக்கீழ்த் தளங்களும் இந்நாட்டின் வணிக வளத்தைக் காட்டும். மானுடவியலில் பாரதப் பெருநாட்டில் எந்த இனமும் கொண்டிராத ஆறு அடுக்குப் பெயரினைப் பதிவு செய்து வைத்த வேளாண் மக்களின் சிறப்பினைக் கொண்டதும் கொங்கே. அவ்வாறே அந்தியூருக்குக் கிழக்கில் மறைந்த மயிலாபுரிப்பட்டணத்தின் வடகிழக்கில் உள்ள ஊஞ்சவனத்தில் உள்ள நடுதறி கொண்ட நடுகல் கோயில் இன்றும் சங்ககால நடுகல் கோயிலின் காட்சியிடமாக அமைந்துள்ளது. இவ்வாறு பல்வேறு வரலாற்றுப் புகழ்கொண்ட கொங்கில் சத்தியமங்கல வட்டத்தில் உள்ள பண்ணாரித் திருக்கோயில் பல்புகழ் நிறுத்திய பெருமைக்குரியது. ஏறத்தாழ 45 ஆண்டுகட்குப் பின்னர் மாண்புமிகு கலைஞர் தம் சீர்மிகு அரசால் குடமுழுக்குக் கண்ட இத்திருக்கோயில் ஆன்மநேய ஒருமைப்பாட்டினை விளக்கும் சமுதாய மையமாக - இலங்குகின்றது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்தம் சிவம் பெருக்கும் ஆணைக்கிணங்க இங்கு இப்போது தொடர்ந்து மாதத்தின் நிறைவு வெள்ளியன்று சைவ சமய ஞானத்தை விளக்கும் சொற்பொழிவும் திருவிளக்கு வழிபாடும் சிருடன் நடைபெற்று வருகின்றது. அனைத்துச் சமயப் பயணிகளும், அனைத்துச் சாதி மக்களும் மலைவாழ் மக்களும்; நாட்டுப்புறத்தினர் நகரத்தினர் யாவரும், கன்னட நாட்டினரும், ஒன்று கூடிச் சாதிமத இனமொழி மரபு கடந்து பக்தியுடன் வழிபடும் சிறப்புக் கொண்டது இப்பண்ணாரித் திருக்கோயில். அத்தகு சீர்மிகு சிறப்புக் கொண்ட இக்கோயிலின் சிறப்புக்கள் சிலவற்றைச் சுருங்கக் காணலாம்.

## செவிவழிச் செய்தியும் வரலாறும்

வடபுலத்து மாமன்னன் அசோகனின் கல்வெட்டில் (கி.மு. 273 - 232) குறிக்கப்பட்ட வாய்மொழிக் கோசராகிய சத்தியபுத்திரர் பெயரால் அமைந்த சத்திய மங்கலத்தின் அருகில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. மேலும் பலகல்வெட்டுக்களில் வட பாரிசார்ந்த நாடு எனக் குறிக்கப்பட்ட வாணியாற்றின் வடபகுதியில் இக்கோயில் சிறந்து விளங்குகின்றது. வழக்கமாக நம்மவர் வரலாற்றை மறந்து புராண மரபுகளைப் போற்றுவதில் ஈடுபாடு மிக்கவர்கள். அவ்வகையில் செவிவழிச்செய்தியாக இத்திருக்கோயிலின் தோற்றம் பற்றி இருவகையான செய்திகளைக் கூறுகின்றனர்.

1. மலையாள நாட்டிலிருந்து வணிகர்களுடன் வந்த அம்மன் பண்ணாரிக் காட்டில் தங்கிய பண்ணாரி அம்மன் என்று கொண்டாடப் பட்டதாக ஒரு செய்தி. 2. அப்பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான காராம்பசு நாள்தோறும் தனது பாலை ஒரு புதரில் சொரிவதைக் கண்டனர். புதருக்குள் சிவலிங்கம் இருக்கக் கண்ட அப்பெரியவர் சுற்றுவட்டார மக்களை அழைத்து வந்து காட்டிப் பசும் பந்தலில் கோயில் அமைத்து வழிபட்டனர் என்றும், அவரது சமாதிக் கோயில் காட்டுக்குள் உள்ளது என்றும் கூறுவர். பின்னர் இத்திருக்கோயிலைச் சுற்றிப் பல்வேறு கோயில்களும் தோன்றியுள்ளன. இச்செய்திகள் யாவற்றையும் கூர்ந்து நோக்கின் ஏறத்தாழக் கொங்கு நாட்டில் உள்ள பல்வேறு கோயில்கட்கும் சிறுசிறு வேறுபாடுகளுடன் இச்செய்திகள் கூறப்படுவதைக் காணலாம். தொன்மவியல் அடிப்படையில் இவற்றை ஆய்ந்தால் சில உண்மைகள் வெளிப்படும்.

ஆனால் பண்ணாரி அம்மன் என்னும் திருப்பெயரை மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டால் ஒரு மாபெரும் வரலாற்றுச் செய்தி நமக்குக் கிடைக்கும். ''கொங்களம்மன்'' என்ற பெயரில் பல்வேறு இடங்களில் கொங்கு நாட்டுக்கேயுரிய அம்மன் அருள் புரியும் கோயில்கள் பலவுண்டு. ஆனால் தமிழகத்தில் எங்கும் பண்ணாரி அம்மன் - பண்ணாரி மாரியம்மன் என்ற பெயரில் கோயில் இல்லை என்பதை நோக்க வேண்டும். இறைமையை ஏழிசையாய்

இசைப்பயனாய்க் கண்டவர்கள் பக்தி மார்க்கத் தைத் தந்த சைவ மெய்யடியார்கள்; சிறப்பாக நால்வர் பெருமக்கள். நாளும் இன்னிசையால் திருநெறிய தமிழால் அயல் வழக்கின் துறை வென்ற பண்ணார்ந்த பதிகம் பாடிய பெருமைக்குரியவர்கள் அவர்கள். எனவே ''தன்னை உணர்த்தும் போது சிவமாகவும் உயிர்களுக்கு அருளவரும் போது சக்தியாகத் தோன்றும் சிவத்துக்கு ''பண்ணார்மொழியம்மை'' என்ற பண்புப் பெயர் பலவிடங்களில் உண்டு. உயிர்களைப் பண்படுத்தி இறையுடன் இசையச் செய்து பேரின்பப் பெருவாழ்வு தருகின்றவள் சக்தி. எனவே ஏழைக்கு எளிவந்த பிரானாய் இலங்கும் சிவத்தின் ஆற்றல் பண்ணார் மொழியம்மையின் வாயிலாக மக்களுக்குச் சென்று சேர்கின்றது.

''அர்ச்சனைப் பாட்டேயாகும்; பண சுமந்த தமிழ்ச் சொல்லால் என்னைப் பாடு'' என்பது பரம்பொருளின் கட்டளை. அக்கட்டளையில் நால்வர் பெருமக்கள் தமிழகத்தில் பக்தியியக்கம் கண்டு பாமரரும் பரம்பொருளைக் காணும் பேறுபெறச் செய்தனர். அவ்வழியில் கொங்கு மண்ணில் பண்ணாய பரஞ்சுடராய் - ஏழிசையின் எழிலாய் - இசைப்பயனாய் - இன்னமுதாய் - அருளவரும் தாயாகப் பண்ணாரித் தாய் இலங்குகின்றார். இதனையே மறைந்த மயிலாபுரிப் பட்டணத்தின் வடகிழக்கில் உள்ள பொன்னழகி நாச்சியம்மன் ''அம்மை அழைக்கும் ஏடு'' ஒன்று பின்வருமாறு பாடிப் பதிவு செய்து உள்ளது.

> ''பண்ணாரித் தாயே பாற்பதியே எங்களம்மா
> காளிமாதேவி ஈசுபரி கங்காலி பொன்னழகி
> மாலி திரிசூலி மாதாவே வந்திறங்கு''

என்று ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னரே பண்ணாரித்தாய் ஏட்டில் இடம்பெற்று பாட்டில் புகழ் பெற்று விளங்குகின்றாள். எனவே மானுட மனத்தைப் பக்குவப்படுத்தி இறையருளுக்குப் பண்படுத்தும் பண் ஆர்ந்த அம்மையே பண்ணாரி அம்மன் என்பது புலப்படும்.

## மூவகை நிலையில் மூலவர்

தமிழகத்தின் மிகப் பழமையான திருக்கோயில்கள் கந்துடை - நடுதறிக்கோயில்களாக மரத்தடியில் அமைந்தன. அதனை உணர்த்தும் வண்ணம் இத்திருக்கோயிலில் இன்றும் சிவலிங்கம் போன்ற வடிவில் மரத்தின் எச்சம் கந்தாக - நடுதறியாக உள்ளது. அடுத்துச் சிவலிங்கமாக - தான் தோன்றியாகத் - தோன்றிய சிவலிங்கம் உள்ளது. இவ்வாறு ஆகம விதிகளுக்கு உட்படாத - நடுதறியாக - தான் தோன்றியாகப் பழமைச் சிறப்புடன் குலதெய்வமாக - கிராமத் தெய்வமாக விளங்கிய நிலை முதல் நிலை. பின்னர் திருக்கோயில் அமைத்துக் காவல் தெய்வமாக - மழைத் தெய்வமாக - கால்நடைகளைக் காக்கும் தெய்வமாக - விழாக்கொண்டாடி நோய் தீர்க்கும் தெய்வமாக - குண்டம் இறங்கும் - பூ இறங்கும் - வழிபாட்டுடன் கூடியது இரண்டாம் நிலை. இப்போது நடுதறிபோல் உள்ள தல விருட்சத்தின் அடிப்பகுதியுடன், சுயம்புவாகிய சிவலிங்கத்துக்குப்பின் அழகுமிக்க அன்னையின் திருவுருவை எழுந்தருளச் செய்து ஆகம வழிப்பட்ட பூசையுடன் ஞான நல்லறக் கோயிலாகக் கொண்டாடுவது மூன்றாம் நிலை. இவ்வாறு பாமரவழிபாட்டில் தொடங்கிப் பக்தியியக்கத்தில் சிறந்து; இன்று ஆகம நிறைவுடன் அன்னையின் வழிபாடு முழுமையடைந்து பண் - ஆர்ந்த வழிபாடாக முழுமை பெற்ற முதல்வியின் வழிபாடாக அமைந்துள்ள திறமும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனத்தில் குடியிருந்து அருள் பாலிக்கும் திறமும் எண்ணிப் பார்க்கத்தக்கதாகும். இக்காட்சி ''சக்தி சிவமாகும் சிவன் சக்தியுமாம்'' என்னும் திருமந்திரத்தை (1772) நினைவூட்டுகின்றது.

## முடிவுரை

> "அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
> அவளன்றி யூர்புகு மாறறியேன்" (1053)

என்னும் திருமந்திரச் சொற்படி இங்கு அன்னை மந்திர நாயகியாக - சக்தியாக - ஆற்றலாக - அனைத்துமாக இலங்கும் தாய்த் தெய்வமாகத் தலைசிறந்து விளங்குகின்றாள். இக்கோயிலின் தனிச்சிறப்பே. ''சாதி மத இன மொழி'' வேறுபாடுகடந்த ஆன்ம நேய ஒருமைப் பாட்டுணர்வுக்கு எடுத்துக்காட்டாக இலங்குவதாகும். வாகனங்களில் செல்வோர் யாவரும் கோயிலைச் சுற்றி வந்து வழிபடுவதும்; சோலகர் முதலான மலைவாழ் மக்கள் தங்கள் பாரம்பரிய முறையுடன் இசை முழக்கி வந்து ஆடிப்பாடி வழிபடுவதும்; ஈரோடு கோவை மாவட்ட மக்களுடன் கன்னட நாட்டவரும் வந்திருந்து குண்டம் இறங்கி நேர்த்திக் கடன் செலுத்துவதும், கால் நடைகள் குண்டம் இறங்கி வழிபடுவதும் ; அன்னை மரபுப்படி ஊர் ஊர்தோறும் எழுந்தருளி அருள் பாலிப்பதும்; அடியவர் நெஞ்சத்தில் பண் ஆர்ந்த - பண் நிறைந்த தாயாகிப் பேரின்ப வாழ்வு தரும் குலதெய்வமாகக் காவல் தெய்வமாக நோய் நீக்கும் தெய்வமாக - மழைத்தெய்வமாக - அருள வரும் சக்தியாகப் பல்வேறுபட்ட மக்களுக்குப் பல் வேறு நிலைகளில் அருள் வழங்கும் அன்னையாக இங்குப் பண்ணாரித் தாய் இலங்குகின்றாள். வைராக்கியமான பக்தியின் வைரவிளைவினை உணர்வோர் உணர்ந்து பேரின்பம் காண்பர்.

# இறைவனும் தமிழும்

- டாக்டர் டி. செல்வராஜ்

இறைவன் சுயம்பு. தமிழும் ஒருவராலோ பலராலோ உருவாக்கப்பட்டதன்று. தானே உருவான, இறைவனைப் போன்ற ஒரு நுண்பொருள்; ஆகவே இதுவும் சுயம்பு.

தோற்றம் அறிய முடியாத பழமை இறைவனுக்கும், தமிழுக்கும் பொது.

இறைவனது அருளாற்றலால் தோன்றியது தமிழ். அருட்கனியின் பிழிவு தமிழ். தமிழின் பொருளாற்றலால் போற்றப்படுபவன் இறைவன். தமிழ்ச் சுவையின் பிழிவு இறைவன்.

தமிழுக்கு ஒரு தெய்வத்தன்மை எப்போதும் உண்டு. புராண காலத்தில் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றெறிந்த குமரவேளும், நிதியின் கிழவனும் முதற் சங்கப் புலவர்களாக வீற்றிருந்து தமிழை வளர்த்தார்களாம். ஆகவே, வரலாறு தெரிந்த காலமுதலே இறைமையும், தமிழும் இரண்டறக் கலந்து நீக்கமற நிலைபெற்றன. தமிழின் அருமை, பெருமை, இனிமை, தனிமை, பழமை முதலான சிறப்பியல்புகளைப் புலப்படுத்த, இறைவர்களே சங்கப் புலவர்களாக வீற்றிருந்தனர் என்று பிற்காலப் புலவர்கள் புனைந்துரைத்தனர். இறைவனில் தமிழையும், தமிழில் இறைவனையும் கண்டனர்.

## திருமூலர்

சமய உலகிலும், பக்தி இலக்கியத்திலும் தமிழ் மொழிக்கும், ''தமிழ்'' என்ற சொல்லுக்கும் புதுப்பொலிவையும், புதுச்சக்தியையும் தந்தவர் திருமூலர். இனிமையும், நீர்மையும் தமிழ் என்ற சொலின் பொருள்களாகும். ''அகப்பொருள்'' என்பது மற்றொரு பொருள். திருமூலர் 'தமிழ்' என்ற சொல்லைப் ''பக்திப்பாடல்கள்'' என்ற பொருளில் பயன்படுத்துகின்றார். ''தமிழ் மூவாயிரம்'' என்பது, திருமந்திரத்திற்கு ஆசிரியர் வைத்த பழைய பெயராம். நூலில்,

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்"

என்ற தொடர் உள்ளது. ''தமிழ் மூவாயிரம்'', ''மூவாயிரம் தமிழ்'' என்ற தொடர்களில் காணப்படுகின்ற ''தமிழ்'' என்ற சொல்லுக்குப் ''பக்திப் பாடல்கள்'' என்பது பொருள். இப்பொருளில் தமிழ் என்ற சொல்லை முதன்முதல் பயன்படுத்தியவர் திருமூலரே.

## தமிழ்

தமிழ்ப்புலவர்களில், 'தமிழ்' என்ற சொல்லை மிக அதிகமாகப் பயன்படுத்தியவர் திருஞான சம்பந்தர். இவர், தேவாரத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில், இச்சொல்லைப்பற்பல அடைமொழிகளுடன் அழைத்து, தமிழ்மொழியின் பெருமைகளை எடுத்துக்காட்டினார்.

"திரு நெறிய தமிழ்"
"அருள்மாலைத்தமிழ்"
"தவம் மல்கு தமிழ்"


முதலிய தொடர்கள், தமிழின் இறைமைத்தன்மையைச் சுட்டுகின்றன.

"சங்கமலி செந்தமிழ்கள் பத்து"
என்று திருஞான சம்பந்தரும்,
"சங்கத் தமிழ்மாலை முப்பது"
என்று ஸ்ரீ ஆண்டாளம்மையாரும்,
"தீதிலாத ஒண்தமிழ்கள் இவை ஆயிரம்"

என்று நம்மாழ்வாரும் தமிழ் என்னும் சொல்லைப் - 'பக்திப்பாடல்கள்' என்ற பொருளில் பயன்படுத்துகின்றார்கள். ''தமிழ்கள்'' என்ற சொல்லாட்சி இவற்றில் ஊன்றிக் கவனிக்கத்தக்கது. பக்திப் பாடல்களைத் ''தமிழ்'', ''தமிழ்கள்'' என்று குறிப்பிடும் மரபு பக்தி இலக்கியங்களில் அதிகமாகும்.

## இறைவனும் தமிழும்:

1) இறைவனைப் போன்றது தமிழ். அவன் இனிமையானவன்; தண்மையானவன்; அழகானவன்; செம்மையானவன்; வளப்பமானவன்; எளிமையானவன்; நிலையானவன்; எல்லார்க்கும் உரியவன்; எல்லார் மனத்திலும், அறிவிலும், வாயிலும் உறைபவன். இறைவனின் இக்குணங்கள் அனைத்தும் தமிழுக்கு உண்டு. எனவே, அவனைப் போற்றக்



கூடிய தகுதியையும், பெருமையையும் கொண்ட மொழி தமிழே என்பது திருஞான சம்பந்தர் கண்ட முடிபு. இவர்,

''சிவனடியைப் பரவிய செந்தமிழ்''

என்று அருளுகிறார். செம்மையான சிவனை வழி படச் செம்மையான தமிழ் ஏற்றது அல்லவா?

2) தமிழைப் போன்றவன் இறைவன்

''பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினில் சுவையொப்பாய்''

என்பது சுந்தரரின் சுந்தர மொழி. இதில், தமிழ் இறைவனுக்கு உவமை.

3) தமிழ் வேறு, இறைவன் வேறு என்ற பேதமில்லை. தமிழின் சுவையாக இருப்பவன் இறைவனே. உருவகம்.

''தண்ணார் தமிழளிக்கும் தண்பாடி நாட்டான்''

என்பது மணிவாசகரின் மணிமொழி. ''தமிழின் இனிய சுவையாகத்தான் கலந்திருந்து, இருமைக்குப் பற்பல பயன்களை அருளுகின்றவன் இறைவன்'' என்பது பொருள். தமிழ் என்ற சொல் திருவாசகத்தில் அமைந்த இடம் இது ஒன்றே. தமிழ்ச்சுவை இறைவனாம், பேதமில்லை.

4) பேதமற்ற நிலை இருக்கின்றபோது, இறைவனைத் ''தமிழே!'' என்று அழைத்தாலும், தமிழை ''இறைவனே!'' என்று அழைத்தாலும் ஒன்றுதான்.

''புல்லாணித் தென்னன் தமிழை''

என்பது திருமங்கையாழ்வாரின் திருமொழி. ''தமிழ்'' என்ற சொல்லால் இறைவனைக்குறித்தார், ஆழ்வார்.

தமிழ் - இறைவன், உவமைகள் முதல் நிலை; இறைவனே தமிழ் - உருவகம்; இரண்டாம் நிலை, ''தமிழ்'' என்ற சொல்லே இறைவனைக்குறிப்பிடுவது மூன்றாம் நிலை; தமிழ் மிக உயர்வாகப் போற்றப்படும் உச்சநிலை இது. தமிழ் என்ற சொல்லே இறைவனை உணர்த்துகின்றது.

இறைவனைத் ''தமிழன்'' என்று குறிக்கின்றார் திருநாவுக்கரசர்.

''ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்''

இவற்றால், இறைவனும், தமிழும் ஒன்றி விட்ட தன்மையை அறியலாம்.

## தமிழ் விடு தூது

இறைவனிடம் தூது செல்லத்தகுந்த மற்றொரு தகுதியும் தமிழுக்குக் கிடைத்தது.

இறைவனை அடையத்துடித்த தலைவி, தமிழைத்தூதுவிடுவதாகப் புனைவது பழைய இலக்கிய மரபு. மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடுதூது என்ற நூல் இந்த முறையில் அமைந்ததே.

''இருந்தமிழே! உன்னால் இருந்தேன்
இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்ற புகழ் பெற்ற அடிகள் இந்த நூலில் உள்ளன. தேவர்களின் புதுமையான அமிழ்தத்தை விடத்தமிழ் உயர்ந்தது. அமிழ்தச் சுவையில் இறைவனில்லை; தமிழ்ச் சுவையில் இறைவன் உண்டு என்பதை முன்னர்க்கண்டோம்.

## அருட்கடலும் அருந்தமிழும்

கடலிடம் மேகம் பெற்ற நீர், மழை நீராகி, அந்தக்கடலையே மீண்டும் அடைகின்றது. அருட் கடலிடம் அடியார்கள் பெற்ற அருந்தமிழ், பக்திப் பாடல்களாகி, அந்த அருட்கடலிடமே மீண்டும் சங்கமமாகின்றது. ''அவனருளால் அவன்தாள் வணங்கி'' என்ற கூற்றின்படி, அவனருளிய

தமிழ் அவனுக்கே அர்ப்பணம் ஆகின்றது. இறைவன் அடியவர்களுக்குத் தமிழை அருளினான்; அவர்கள் மூலம் தன்னைத்தானே போற்றிக்கொண்டான்.

### சிவனும் தமிழும் (திருமூலர்)

மேற்குறித்த பரிவர்த்தனையை முதன் முதல் பாடியவர்திருமூலர்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே''

''இறைவன், தன்னைத்தமிழ்ப் பக்திப்பாடல்களால் பாட, என்னை நன்றாகப்படைத்தனன்,'' அடியார்க்குப் பிறவியைக் கொடுத்தான்; பக்திப்பாடல்களைப் பெற்றான். பரிவர்த்தனை நன்றாகப் படைத்தல் - தமிழ்ப் புலமையுடன் படைத்தல்.

### விஷ்ணுவும் தமிழும் (திருமழிசை ஆழ்வார்)

-''விதையாக
நற்றமிழை வித்தினன் உள்ளத்தை
நீவிளைத்தாய்
கற்றமொழி யாகிக் கலந்து''

என்றார்திருமழிசைஆழ்வார். இறைவன், ஆழ்வாரின் திருவுள்ளத்தில் தமிழை விதைத்தான்; அறுவடைப் பயனும் அவனுக்கே.

### விஷ்ணுவும் தமிழும் (நம்மாழ்வார்)

''என்னை ஆட்கொண்ட இறைவன், எனது உள்ளத்துள் இருந்து, ''தன்னைத்தானே துதித்துக் கொள்கிறான்'' என மொழிந்தார் நம்மாழ்வார். ''என் நெஞ்சத்து உள்ளிருந்து இங்கு இருந்தமிழ் நூலிவை மொழிந்து'' என்றார். அதாவது, ''இறைவன் ஆழ்வாரின் உள்ளத்துள் உறைகின்றான்; ஆழ்வாரின் உள்ளத்துள் உறைந்து தமிழ் நூல்களை மொழிகின்றவனும் அவனே'' என்று இறைவனுக்கும், தமிழுக்கும் இடையிலுள்ள இணைப்பைப்புலப்படுத்துகின்றார். அவனே தமிழ் நூல்களை மொழிகின்றான்; கொடுக்கின்றவனும் தானே; கொள்கின்றவனும் தானே.

### முருகனும் தமிழும்

முருகனைத் 'தமிழ்க்கடவுள்' என்றே கூறுவர். அகத்தியனார்க்குத்தமிழ் கற்பித்தவன் முருகன். ''பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கும் அருளாளன்'' என்று குமரகுருபர சுவாமிகள், முருகனின் அருளைப் போற்றுகின்றார்.



அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் முருகனைச் 'செந்தமிழ்நூல் விரித்தோன்' என்றும், 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்' என்றும் உரைப்பது, தமிழ் மொழியின்மீதும், தமிழ்ப் புலமையின் மீதும் அவன் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது. அவனை முத்தமிழால் வைதாலும் அங்கு, (அப்போதே), வைதவரை வாழவைக்கும் பண்பு அவனுக்கு மட்டுமே உண்டு.

''யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற, வேலவர் தந்ததனால்''

எம்மறிவு - இயற்கையறிவு; கல்வி - (தமிழ்) நூலறிவு. இவற்றை முருகனே அருளினான்; மீளப்பெற்றுக்கொண்டான். (கந்தரனுபூதி) தமிழைத்தருபவனும், பெறுபவனும் முருகனே.

''முருகனின் பதினெட்டுக்கண்களும் மெய்யெழுத்துகள்; ஆறு முகங்களும் இன எழுத்துகள்; பன்னிரு தோள்களும் உயிர் எழுத்துகள்; இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியின் சம்மேளனமான வேல் என்பது ''ஃ'' என்ற ஆயுத எழுத்து - என்ற திருப்பாடலின்படி, தமிழ் எழுத்துகளாகத் தோற்றமளிக்கின்றவன் முருகன்.

மேலே, திருமூலர் முதல் அடியவர்கள் பாடிய பக்திப்பாடல்கள் அனைத்தும், தமிழ் நூலிழையில் கோக்கப்பட்ட இறையொளி வீசும் மணிகளாய்த் திகழ்கின்றன.

**தமிழின் காரணமாக நடந்த இறைவர்கள்:**

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக, பரவையிடம், சிவன் தூதுவராக இருமுறை நடந்தார்.

"பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப்
பரவை தன்பால் தூது சென்று."

''தமிழ்'' - சுந்தர மூர்த்தி சுவாமிகளைக் குறிப்பிடுகின்றது.

திருமழிசை ஆழ்வாரின் சீடன கணிகண்ணன். தன்னைப்புகழ்ந்து பாடாத கணிகண்ணனை நாடு கடத்தினான் பல்லவ மன்னன், கணிகண்ணன் புறப்பட்டான். திருமழிசை ஆழ்வார், ''கச்சி மணி வண்ணா! கணிகண்ணன் போகின்றான். நானும் அவனோடு போகின்றேன். நீயும் உனது பாயைச் சுருட்டிக்கொண்டு புறப்படு'' என்று ஆணையிட்டார். சீடன் முன் செல்கிறான்; பின்தொடர்கின்றார் ஆழ்வார். ''தமிழ்'' முன் செல்ல, தமிழ் என்ற பாசத்தால் இழுக்கப்படுகின்ற பெருமாள் அவரைப் பின் தொடர்கின்றார். இவருக்குச் ''சொன்ன வண்ணம் செய்த பெருமாள்'' என்பது பெயர். இத்திருக்காட்சியைக் குமர குருபர சுவாமிகள்,

"பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப்பசுங் கொண்டலே"

என்று பாடியருளினார். ''தமிழ்'' - திருமழிசை ஆழ்வாரைக் குறிப்பிடுகின்றது.

**தமிழ்த்தெய்வம்**

நூலின் நுழைவாயிலில், இறைமையை வழிபட்டார் திருவள்ளுவர். இயற்கையைப் போற்றினார் இளங்கோவடிகள். தொடர்ந்து, புலவர்கள் தமக்கு விருப்பமான தெய்வங்களை வணங்கினார்கள்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் (1855 - 1897) மனோன்மணீயத்தின் தொடக்கத்தில், முதலில், மரபின்படி, தெய்வத்தை வணங்கினார். அடுத்துத் தமிழ்த் தெய்வத்தை ''நீராரும் கடலுடுத்த'' என்ற பாடலால் வணங்கினார். இது தமிழைத் தெய்வமாக வணங்கும் முதல் பாடல்.

தெய்வத்தமிழ், தமிழ்த் தெய்வமாயிற்று.

★★★

## அன்று போற்றி செய்தவர்கள்!

இறைவன் திருவடிகளில் மலர்களைத் தூவி வழிபடுவதை அர்ச்சித்தல் என்பர். அதனால், அர்ச்சனை செய்பவர்களை அர்ச்சகர்கள் என்றனர்.

'நம' என்பதற்கு இணையாக ''போற்றி'' என்று கூறி மலரிட்டு வழிபாடு இயற்றுபவர்களை முற்காலத்தில் 'போற்றிகள்' என்றே அழைத்துள்ளனர்.

இன்றும் கேரள மாநிலத்திலும் தமிழகத்தில் திருச்செந்தூர் முதலான இடங்களிலும் கோயில் பூசை செய்பவர்களை 'போத்திகள்' அல்லது 'போத்திமார்' என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

தமிழ் அர்ச்சனை தொன்றுதொட்டு நடைபெற்று வருவதுதான் என்பதற்கு இது ஒரு சான்று.

தகவல் :
**முனைவர் பருத்தியூர் சந்தானராமன்**

# சித்திரா பௌர்ணமியும் சித்திரகுப்தப் பூசையும்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

நம் பாரத தேசமானது புண்ணிய பூமி. பாவத்திற்கு அஞ்சியும், புண்ணியத்திற்கு அடிபணிந்தும் வாழும் தேசம். அறிந்தும் அறியாமலும் செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ள என்ன வழி என்று முனிவர்கள் தேடிக்கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். பாவங்களைப் போக்கிக் கொள்ளவும், இனி பாவங்கள் சேராவண்ணம் காத்துக் கொள்ளவும் வழி வகுத்துச் சென்றுள்ளார்கள்.

அப்படிப்பட்ட வழியே புராணங்களும், இதிகாசங்களும் ஆகும். அதன் மூலம் விரதங்களையும், பூஜைகளையும், வழிபாட்டு முறைகளையும் அறியமுடி கிறது.

அப்படிப்பட்ட வழியில் வந்ததுதான் சித்திர குப்த விரதம். 'நாரத ஸம்ஹிதை' என்ற நூல் இவ் விரதமுறையை விவரிக்கிறது.

இவ்விரதத்தை தம்பதிகளாகவும் செய்யலாம்; பெண்கள் தனியாகவும் செய்யலாம்.

## சித்திரா பௌர்ணமி

ஒரு நாள் கைலாயத்தில் சிவபெருமானும், பார்வதிதேவியும் ஆனந்தமயமாய் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து ஈசன், ஒரு 'பொன்' தகட்டை எடுத்து அதில் ஓர் அழகான சித்திரத்தை வரைந்தார். சித்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்த பார்வதியின் கண்கள், பிரகாசமடைந்து, உதடுகள் அர்த்தத்துடன் மலர்ந்தன. மகாதேவனும் சிரித்து விட்டு, அந்தப் பொன்னேட்டுச்சித்திரத்திற்கு உயிர் ஊட்டினார். அழகான அந்தச் சித்திரம் உயிர் பெற்று ஆணழகனாய் பார்வதி பரமேஸ்வரன் முன்னால் நின்றான். ஈசனும் அந்த ஆடவனுக்கு, ''சித்திரத்திலிருந்து வந்ததால், நீ 'சித்திரன்' என்று அழைக்கப்படுவாய்'', என்று பெயரையும் சூட்டி விட்டார்.

பார்வதிதேவி ஈசனிடம், ''நாதா! இந்த சித்திரனுக்கு இந்த தேவலோகத்தில் வேலையா? அல்லது பூலோகத்திற்கு வேறு வேலையாக அனுப்பப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.


அதற்கு ஹரன் ஒரு புன்னகையுடன் பார்வதியைப் பார்த்து, ''தேவீ! ஒவ்வொரு வரவிற்கும் ஒரு செலவு இருக்கிறது. இந்த சித்திரனுக்கும் செலவு உண்டு. பூலோகத்தில் நடக்கும் வரவு-செலவு கணக்குகளை, இனி சித்திரன் தான் கவனித்துக் கொள்ளப்போகிறான்,'' என்று கூறினார்.

அதற்கு தேவியும், ''பூலோக வரவு செலவா? அப்படி என்றால்....? எதற்காக பூலோக வரவு செலவு நமக்குத் தேவை'', என்று குழப்பமாய் கேட்டாள்.

சர்வேஸ்வரனும், ''ஒவ்வொரு மனிதனும் செய்யும் நல்ல காரியங்கள், கெட்ட செயல்கள், நல்ல எண்ணங்கள், விரோத மனப்பான்மைகள் என்று எல்லாவற்றையும் அவ்வப்போது இவன் குறித்து வைத்துக் கொண்டு, அதை 'யமதர்மராஜ'னிடம் ஒப்படைத்து விடுவான். அவரவர் செயலுக்கேற்ப தர்மராஜன் நரகமோ அல்லது சொர்க்கத்தையோ அளிப்பான்'', என்று விளக்கினார்.

சர்வேஸ்வரனின் ஆணைப்படி அது முதல் சித்திரன், யமதர்மனிடம் கணக்கர் வேலையில் அமர்ந்து, ஓலையும் எழுத்தாணியுமாக தம் வேலையில் தர்மம் சற்றும் நழுவாதவராக செவ்வனே நடத்தி வருகிறார்.

கணக்கர் என்ற சொல்லுக்கு 'குப்தர்' என்ற அர்த்தமும் உண்டு. சித்திரத்திலிருந்து வந்தமையால் இந்த கணக்கருக்குச் 'சித்திரகுப்தர்' என்ற பெயர் வந்தது. பாசவலை வீசி, கடைசி காலத்தில் ஜீவராசிகளை இழுத்துச் செல்லும் யமதர்மராஜா, சற்று கூட தர்மத்திலிருந்து நழுவாதவர். சிறந்த பண்பாளரான



யமதர்மராஜனிடம், கணக்கராகப் பணியேற்று பாவங்களையும் புண்ணியங்களையும் கணக்குச் சொல்லத் தொடங்கினார் சித்திரகுப்தர்.

உண்மையை மட்டும் சொல்ல வேண்டிய நிலை சித்திரகுப்தனுடையது; அதில் கொஞ்சம் கூட பொய் கலப்பே கிடையாது.

சித்திரகுப்தனுக்கு, காஞ்சி நகரத்தில் ஒரு கோயில் இருக்கிறது. சித்திரகுப்த ஸ்வாமி தனது தொழிலுக்கு ஏற்றவாறு இக்கோயிலில் சிலா வடிவில் ஒரு கையில் பனை ஓலைச் சுவடியும், இன்னொரு கையில் இரும்பு எழுத்தாணியுடனும் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். சித்திரகுப்த ஸ்வாமியின் தேவியின் பெயர் 'காணாம்பிணி' ஆகும்.

சித்திர குப்தனின் அதிதேவதை 'கேது' பகவான் ஆகும். கேது கிரஹத்தால் அவதியுறுவோர், 'சித்திர குப்தர்' கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தால் நிவாரணம் பெறலாம்.

எத்தனையோ கோடானுகோடி ஜீவராசிகளின் கணக்கைச் சரிவர பார்த்து வரும் இந்த தெய்வத்தை வழிபடுவது என்பது மிக மிக விசேஷமல்லவா....!?

★★★

# சிவராத்திரிப் புராணக் கதைகள்

- நடராசன் அடிமை

கேகய தேசத்தில் பேரழகியாகப் பிறந்த சௌமினி என்ற ஒரு பெண் திருமணமாகிக் கணவனையிழந்து, கெட்டழிந்து, ஒரு காட்டில் சென்று வேடன் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு அவனையும் இழந்து பிச்சையெடுத்தாள். அவள் செய்யாத தவறே கிடையாது. புலால்உண்ணும் வழக்கத்தைக் கைக்கொண்டு, தவறுதலாக ஒரு பசுங் கன்றைக் கொன்று அதனை உண்டாள். தெருவில் பிச்சையெடுக்கக் கைநீட்டிய காலத்தில் எவரோ ஒரு வில்வக்கிளையைக் கையிலிட கண்ணிழந்த நிலையில் ஆகாத ஏதோ ஒரு இலை என எண்ணி அதனைத் தூக்கி எறிய அந்த வில்வம் அவள் பக்கத்திலிருந்த சிவபெருமானின் திருமேனியில் பட்டது.

தீய வெம்பசி கனற்றவோர் தெருவினிலிருந்து
தூய கண்ணிலேற்கு உதவுமின் சோறெனை இரந்து
கூய போதில் அம்மறுகிடை கிடைக்குமோர் களியன்
ஆயவில்வம் நிற்குணவு தென்றவள் கரத்தளித்தான்

புன்மையால் அவன் இட்ட கூவிளை தனைப் புசித்தற்கு
அன்மையால் அயல் எறிந்தனள் ஆங்கது பழைய
தன்மையாகிய சிவலிங்க நாயகன் தலையிற்
தின்மை தீர்ப்பவர் தழை எனச் சிறந்த

உணவு கிடைக்காமல் பசியுடன் தூக்கமுமில்லாதிருந்த அந்த நாள் சிவராத்திரியாகவும் இருந்து அவள் தற்செயலாக வில்வத்தைச் சிவபெருமான் மீது எறிந்ததால் புண்ணியம் கிடைத்தது. உயிர் நீங்கிய அவள் சிவபுரம் அடைந்து சிவதரிசனம் கிடைக்கும் பேறு பெற்றாள். சின்னாளில் அவள் நற்கதியடைந்தாள்.

நம்மையறியாமல் நெருப்பைத் தீண்டினால் சுடாதிருக்குமோ? அம்மாதிரி நம்மையறியாமல் பட்டினியிருந்து, நித்திரையில்லாதிருந்து ஒரு மலரை இட்டால் கூட நற்கதி பெறலாம்.


இவ்வுரை மெய்யோ ஆகும் என்னென மனத்தாறின்றி
வெவ்வழல் தீண்டினாலும் சுடுமன்றி விடுமோ அம்மா

என்பார் திருவிளையாடற் புராணமுடையார். உண்மையான பக்தியுடன் நீராடி, உள்ளும் புறமும் தூய்மையுடன், உணவின்றி, கண் விழித்து வழிபாடு செய்பவர், இறைவன் பெருங்கருணையை அடைந்து நற்கதியடையலாம் என்பது உய்த்து உணரத்தக்கது.

★★★

இராமபிரான் பிறந்த அயோத்தி மாநகரை ஆண்டான் மித்திரசகன் என்ற அரசன். அவனது மனைவியின் பெயர் மதயந்தி. நீதி நேர்மை தவறாத அவ்வரசன் வேட்டைக்குச் சென்ற போது காட்டில் ஒரு தாய் வயிற்றுதித்த இரண்டு அரக்கர்கள் அரசனுடன் போரிட்டனர். மூத்தவன் கொல்லப்பட்டான். இளையவன் மித்ரசகனை வஞ்சனையால் வெல்ல எண்ணி மனித உருவம் தாங்கி அவனிடம் சமையற்காரனாக வேலை செய்யலான்.

அரசன் ஒரு நாள் தன் முன்னோர்களுக்கு திதி கொடுக்கும் போது வசிட்டர் வந்தார். அவருக்கு அரசன் விருந்தளிக்கும்போது மனித உருவிலிருந்த அரக்கனான சமையற்காரன் மனித மாமிசத்தையே பக்குவம் செய்து படைத்திட்டான். ஞானக் கண் கொண்டு அறிந்த வசிட்டர் அவ்வரசனை ''எனக்கு நரமாமிசம் கொடுக்க முயன்றதால் உன் செல்வங்களை எல்லாம் இழந்து அரக்கன் உருக்கொண்டு அலைவாயாக!'' எனச் சாபமிட்டார். ''மனத்தினால் கூடத் தீங்கு நினையாதவன். என்னையறியாமல் பிறன்செய்த குற்றத்திற்கு என்னைச் சபீத்தீரே! உம்மைநான் சபிக்கிறேன்'' எனத் தன் கையில் நீரெடுத்து அவர் மீது தெளித்துச் சாபம் கூறப் போன அரசனை அவன் மனைவி மதயந்தி வணங்கி ''குரு தெய்வத்திற்குச்சமமானவர். எந்த அரசாவது குருவைச் சபித்ததுண்டா?'' எனத் தடுத்தனள். வசிட்டரும் அமைதியடைந்து ''பன்னிரண்டு வருடங்கள் அரக்கனாகத் திரிந்து பழைய நிலையடைக'' என்றார். தன் கையிலெடுத்த நீரை அரசன் தன் காலிலேயே தெளிக்க கால் கறுத்து கன்மாடபாதன் என்ற அரக்க உருவம் கொண்டான்.



காட்டிலே வரும்போது கணவன் மனைவியாக இருவர் எதிர்வர, கன்மாடபாதன் அந்தப் பிராமணனைக் கொன்று தின்ன முயன்றான். அவன் மனைவி அரக்கனைத் தடுத்து ''என் கணவனை நீ கொன்றால் நானும் தீப்புகுந்து என்னை அழித்துக் கொள்வேன்'' என்றாள். அதைச் சிறிதும் கவனியாது அரக்கன் அந்தணனைக் கொல்ல, அவன் மனைவி ''நீ உன் சாபம் நீங்கி உன் மனைவியாரைச் சந்தித்து வாழ முயற்சி செய்தால் அழிந்து விடுவாய்'' எனச் சாபமிட்டுத் தீப்புகுந்தாள். அரசன் நாடுபுகுந்து தன் மனைவியான மதயந்தியைத் தீண்ட முயற்சித்த போது, மனைவி அவள் பெற்ற சாபத்தையறிந்து தடுத்தனள். தனக்கு இன்பம் கிடைக்காதது மட்டு மல்ல, மக்கட் பேறில்லையே என வருந்த மாமுனிவர்கள் சிலரிடம் சென்று முறையிட்டான்.

மாமுனிவர்களைப் பற்றிக் கூறுங்கால் ''**ஒரே** மனதாய் பாவபுண்ணியங்களான **இரண்டையும்** வெறுத்து, ஆணவம், கன்மம், மாயைகளாகிய மூன்றையும் நீக்கி, **நான்கு** வேதங்களையும் அறிந்து, **ஐம்புலன்களை** அடக்கி, பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவஞ்செய்யும் முனிவர்கள் என அவர்கள் பெருமை கூறப்பட்டுள்ளது.

ஒருமனமாய் இருவினையின் துவக்கறமுக்குறும்பு
எறிந்திட்டு உயர் நால்வேதம்
தருபொருள் ஆய் ஐந்து அவித்து ஐந்தழல்
நாப்பண் நின்று பெருந்தவங்களாற்றிக்
கருதருமறலி வலை கடந்து முக்காலுமுணர்ந்து
கணிக்கவல்ல
பொருவருமா முனிவரர்கள் அனுமதி கொண்டு
அரியதவம் புரியும்

என்ற இப்பாடலில ஒன்று முதல் ஐந்து வரை எண்கள் வரும் அழகு காணலாம். இதை எண்ணலங்காரம் என்பர்.

அப்படிப்பட்ட முனிவர்களிடம் இசைவு பெற்றுத்தவம் புரியுங்காலத்து இவனால் கொல்லப் பட்ட அந்தணன் பிசாசு உருவங்கொண்டு அரசனைத் துன்புறுத்த, முனிவர்களின் புத்திமதிப்படிப் பல இடங்களுக்கும் புண்ணிய தீர்த்த யாத்திரை செய்து மிதிலை வந்தபோது கௌதம மகரிஷியைக் கண்டு வணங்கினான்.

எண்ணரும் தருமம் செய்தேன்! ஈறில்மந்திரம்
நவின்றேன்!
விண்ணவர்க்கு அவிகள் நல்கும் வேள்விகள்
பலவும் செய்தேன்!
பண்ணரும் பாவம் நீங்கப் பெற்றிலேன்!
படிவ! உன்றன்
தண்ணருள் பெற்றேன் உய்யுங்காலமும்
உளதாமன்றே.

எனக்கூறி முறையிட, கௌதமர் ''மாசிமாதம் கிருஷ்ணபட்சம் (தேய்பிறை, பதினான்காம் நாள்) திரயோதசியில் இரவில் தூங்காது நான்கு சாமமும் கண்விழித்து தாகம் பசி இவற்றை வென்று வில்வ பத்திரம் கொண்டு சிவபெருமானை அருச்சனை செய்ய உன் துன்பங்கள் நீங்கும், அதுவும் திரு கோகர்ணம் என்ற தலத்தில் மிகவிசேடம் என்று கூறினார்.

சிவபெருமான் ஒரு சிவலிங்கத்தை இராவணனுக்கு அளித்து அதை எங்கும் கீழே வைக்காமல் இலங்கைக்கு எடுத்துச் சென்று பிரதிட்டை செய்து விட்டால் அவனை யாருமே வெல்ல முடியாதபடி பலம் ஏற்படும் எனக் கூறினார். இலங்கைக்குச்

சிவலிங்கத்தை எடுத்துச் செல்வதைத் தடுக்கும் படி விநாயகப் பெருமானை தேவர்கள் வேண்டினர். செல்லும் வழியில் இராவணன் தன் கைகால்களைச் சுத்தம் செய்து கொள்ள விரும்பினான் (இதை வேறு விதமாகக் கூறுவர்). பிரமசரிய உருவத்தில் தோன்றிய விநாயகப் பெருமான் சிவலிங்கத்தைத். தன் கையில் வாங்கி இராவணனை மும்முறை அழைக்க அவன் வராமையினால் கீழேவைக்க அதை மீண்டும் எடுக்க இயலாத இராவணன் சிவலிங்கத்தைக் கீழே வைத்த விநாயகரின் தலையில் குட்டினான். **அந்தத் தழும்பு இன்னும் உளது என்பர்.** இராமபிரானுக்கு திருமுடிசூட்டு விழா நடந்தபின், இட்சுவாகு குலதனம் என அழைக்கப் படும் **திருவரங்கப்பெருமானின்** உருவத்தைப் பெற்று இலங்கை செல்லும் வழியில் விநாயகர் பிரமசாரி உருவத்துடன் தோன்றி, விபீஷணன் கொடுத்த திருவரங்கப் பெருமானின் உருவைக் கீழே வைக்க அதுவே ஸ்ரீரங்கம் **திருக்கோயிலாகியது.** விநாயகர் தலையில் விபீஷணன் குட்டியதால் ஏற்பட்ட தழும்பு **திருச்சிமலைக்கோட்டை பிள்ளையார்திருக் கோயிலில் உள்ள சிலாவிக்ரகத்தில் காணப் படுவதாகக் கூறுவர்.**

இது தவிர பசுவொன்று தனது காதினால் கங்கை நீர் கொண்டு வந்து சிவபெருமானுக்கு தினம் அபிடேகம் செய்ததாகக் கூறுவர்.(கோ - பசு. கர்ணம் = காது) இது நடந்த இடத்திற்கு திருக் கோகர்ணம் எனப் பெயர் வந்தது. மலை மீதுள்ள சுனையொன்று பசுவின் காது போன்று காட்சி யளிக்கின்றது என்பர். **தட்சிண கோகர்ணம்** என்ற அவ்வாலயத்தின் தெய்வம் கோகர்ணேஸ்வரர் என்றும், அம்மையின் பெயர் பிரகதாம்பாள் என்றும் புதக்கோட்டை அரசவம்சத்தினர் தம்மை **பிரகதாம் பிகா தாஸர்** என அழைத்துக் கொள்வர் என்றும் கூறுவர்.

வடக்கேயுள்ள திருக்கோகர்ணத்தில் உள்ள சிவலிங்கத்தை இராவணன் எடுக்க முயற்சித்து முடியாது ''இது மாபல லிங்கம்'' எனக் கூறியதால் அந்தப் பெயருடனேயே விளங்குகின்றது. இராவணன் அந்த லிங்கத்தை எடுத்த போது அது பசுவின் காது மாதிரி நீண்டுவந்ததால் கோகர்ணம் எனப் பெயர் வந்தது.

இராவணன் சிவலிங்கத்தை கீழே வைத்து எடுக்க முடியாது செய்த விநாயகப் பெருமானைத் தலையில் அடித்தான். விநாயகர் அவனை அப்படியே அள்ளி எறிந்து எறிந்து பிடித்தார். நடுங்கிய இராவணன் ''யாரோ பிராமணப் பிள்ளை நீ என எண்ணி உன்னைக் குட்டினேன். பொறுத்தருள்க'' என்னலும், விநாயகப் பெருமான் ''உன் இருபது கைகளாலும் உன்பத்துத் தலைகளிலும் குட்டிக் கொள்'' எனக் கூற இராவணன் அவ்வாறே செய்தான். ''இம்மாதிரி தமது கைகளால் தலையில் எவர் குட்டிக் கொள்ளுகிறாரோ, அவர்களுக்கு மகிழ்ந்து அருள்புரிவேன்'' எனக் கூறி விநாயகர் மறைந் தருளினார்.

அன்னது கண்டு உவந்தருளி ஐங்கரத் தோன்
இன்று முதல்
என் அருள் நலம் வேண்டி இன்று உனைப்போல்
இருகரத்தால்
சென்னியுறப் புடைத்தவர் பால் சிந்தை
மகிழுவமென்னா
மின்னின் மறைந்தனன் நிருதன் வேலை
இலங்கையிற் புகுந்தான்.

மேற்படி நிகழ்ச்சி கந்தபுராணத்தில் கஜமுகா சுரன் வரலாற்றில் காணப்படுகிறது. தன் எதிரில் எவராவது வந்தால் தமது கைகளால் தலையில் மும்முறை குட்டிக் கொண்டு, காதுகளைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழுந்து தோப்புக் கரணம் போடுமாறு தேவர்களை கஜமுகாசுரன் கட்டளையிட்டான். விநாயகர் கஜமுகாசுரனைக் கொன்றபின் தேவர்கள் அதே மரியாதையை விநாயகப் பெருமானுக்குச் செய்கிறோம் எனக் கூற விநாயகப் பெருமான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதாகக் காணப்படுகிறது.

''நென்னல் காறும் நிகரில் கயாசுரன்
முன்னர் ஆற்றும் முறைப்பணி எந்தைமுன்
இன்னநாள் தொட்டு இயற்றும் யாமென
அன்ன செய்திரென்றான் அருள் நீர்மையால்''

விநாயகப் பெருமானால் கீழேவைக்கப் பட்ட லிங்கம் இத்திருக்கோகர்ணத் திருத்தலத்தில் கயிலை போல் பிரகாசிக்கின்றது. இத்தகைய கோகர்ணம் சென்று சிவராத்திரி அன்று வழிபட்டு மித்திரசகன் தன் பாவங்கள் நீங்கினான் என சிவராத்திரிப் புராணம் கூறுகின்றது.

''வளமைதரு கோகனத்தில் மாகதிச்
சிவநிசியை மகிழ்ந்து நோற்றுப்
பழிவிளைக்கும் பிரமகத்தி பற்றறவே
தீர்ந்தபினர் பரமன் செய்ய
கழலடைந்து பேரின்பம் கலந்திருந்தான்
சிவநிசியைக் கருத்தில் உற்ற
உளமகிழ்வால் நோற்றவர்கள் பேரின்ப
வீடடைவர் உண்மை
என்றான்.''

என்று சிவராத்திரி விரத மகிமை கூறப்பட்டிருப்பது காண்க.

# எல்லார்க்கும் தான் ஈசன்

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்

உயிரினங்கள் உணர்ந்து கொண்டாலும் உணரா விட்டாலும் ஈசன் எல்லோருக்கும் இறைவனாகவே உள்ளான். தாவரம் முதல் தெய்வங்கள் வரை எல்லோராலும் தொழப்படும் ஒரே பரம் பொருளாகப் பரமசிவன் விளங்குகின்றான்.

'எல்லார்க்கும் தொழும் ஈசரே'
'எல்லார்க்கும் தான் ஈசன்'

என்ற தேவாரமும் திருவாசகமும் போற்றுகின்றன. படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களைப் புரியும் க்டவுளாம் பரமேசுவரனைப் பறவை, மிருகம், அசுரர், மனிதர், வானவர், தெய்வங்கள், நவகிரகங்கள், நவசக்திகள் என அனைவரும் தொழுது வழிபடுகின்றனர்; வரமும் நலமும் பெற்று வாழ்கின்றனர்.

வாழ்த்துவதுவும் வானவர்கள் தாம் வாழ்வான்
மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தமை எல்லாம் தொழ வேண்டி

என்று திருவாசகம் கூறுவது போல் வானவர்கள் பரமேசுவரனை வழிபட்டு, வேண்டும் வரங்கள் பெற்ற தலங்களே உலகெங்கும் காணப்படுகின்றன.

## தெய்வங்கள் வழிபட்ட தலங்கள்

சிவனை பிரம்மன், விஷ்ணு, ருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும், ஒன்றாக வழிபட்டு தங்களுக்கு உரிய வாழ்வு பெற்ற தலமே திரியம்பகேசுவரம். இது பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று. மகாராட்டிரத்து நாசிக் அருகே உள்ளது. மும்மூர்த்திகளுக்கு அருள் புரிந்ததால் பரமேசுவரனுக்குத் திரியம்பகேசுவரர், மூவர்கோன் என்று பெயர்கள். மூவரும் வழிபட்டதால் மூன்று தாமரை மொட்டுகளின் அடையாளம் சிவலிங்கத்தில் உள்ளன. த்ரிநாட் (திரி நாடு) என்பதும் வழிபட்ட ஊர். இது அமெரிக்காவில் உள்ளது.

பயந்து காத்து அழிக்கும் மற்றை
மூவர் கோனாய் நின்ற முதல்வன்
மூவர் நின்று ஏத்த முதல்வன் ஆட

என்று மாணிக்கவாசகர் துதிக்கின்றார். மும்மூர்த்திகளும் பரமேசுவரனைத் தனித்தனியே வழிபட்ட தலங்களும் பல உள்ளன.

பிரம்மபுரம் எனப்படும் சீர்காழி, அயனீச்சுரம், பர்மா போன்றவை பிரம்மன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்ட தலங்களாகும்.

திருமாற்பேறு, பேறு (அமெரிக்கா), வீழிமிழலை, சிதம்பரம், சக்கரப்பள்ளி, காசி போன்ற பல தலங்கள் விஷ்ணு சிவபூசை புரிந்து நலமும் வரமும் பெற் தலங்களாகும்.

ருத்திரப் பிரயாகை, ருத்ரகோடி, ரோம் ஆகியவை பதினொரு ருத்திரர்களும் சிவபூசை புரிந்து வாழ்வு பெற்ற தலங்களாகும். ரோம் சிவலிங்கம் இத்தாலிப் பொருட்காட்சி சாலையில் உள்ளது.


'கோன் என்று பல்கோடி உருத்திரர்கள் போற்றும்' என்று தமிழ் காத்த திருஞானசம்பந்தர் போற்றுகிறார்.

திருச்சக்தி முற்றம், காஞ்சி, மதுரை, மயிலை, திருவாவடுதுறை, கிரானேஸ்வரம் (மகாராட்டிரம்) போன்ற பலப்பல தலங்கள் பராசக்தி சிவபூசை புரிந்து பல்வேறு வரங்களும் சக்திகளும் பெற்ற தலங்களாகும்.

செய்ஞலூர், முருகன் பூண்டி, திருச்செந்தூர், போன்ற பல்வேறு தலங்கள் முருகன் சிவபூசை செய்த தலங்கள். திருச்செந்தூரில் முருகன் ஐந்து லிங்கங்களைப் பிரதிட்டை செய்து பஞ்சலிங்க வழிபாடு நிகழ்த்தினான்.

திருச்செங்காட்டங்குடி, கணபதீச்சுரம், திருக்கச்சி, அனேகதங்காவதம் போன்ற தலங்கள் பிள்ளையார் சிவலிங்கப் பிரதிட்டை செய்த பூசை புரிந்த தலங்களாகும்.

சாத்தமங்கை, சாத்தனூர் ஆகியவை ஐயப்பன் பரமசிவனைப் பூசை புரிந்து பேறு பெற்ற தலங்களாகும்.



திருநெய்த்தானம், திருக்கச்சபேசம் ஆகியவை சரசுவதி சிவபூசை புரிந்த தலங்கள்.

ஸ்ரீசைலம், திருநின்றியூர், திருவேட்களம், திருத்தெங்கூர் போன்ற பல தலங்கள் திருமகள் சிவபூசை புரிந்து நலம் பெற்ற தலங்களாகும்.

மதுரை, இந்திர நீலப்பருப்பதம், கண்ணார்க் கோயில் மற்றும் பிற தலங்கள் இந்திரன் சிவபூசை புரிந்து வாழ்வு பெற்ற தலங்கள்.

குரங்காடுதுறை, திருக்குரக்குக்கா, திருவலிதாயகம், இராமேஸ்வரம், திருவுசாத்தானம் போன்ற தலங்கள் அனுமன் ஈசனை வழிபட்டு வரம் பெற்ற தலங்களாகும்.

நாகேச்சுரம், (நாகாலாந்து) நாகர் கோயில் பாம்புரம் ஆகியவையெல்லாம் நாக தெய்வங்கள் இறைவனை வழிபட்ட தலங்களாகும்.

**நவகிரகங்கள் வழிபட்ட தலங்கள்**

சூரியனார் கோயில், பரிதிநியமம், பரிதியூர் போன்ற தலங்களில் சூரியன் சிவபூசை செய்து பல வரங்களைப் பெற்றுப் பரமேசுவரனது கண்ணாகவும், வடிவமாகவும் விளங்கும் பேறு பெற்றான்.

திங்களூர், சோமேஸ்வரம் ஆகிய தலங்களில் சந்திரன் சிவபூசை புரிந்து சாபம் நீங்கப் பெற்று சேமம் அடைந்தான். சோமேஸ்வரம் பன்னிரு ஜோதி லிங்கத்தலங்களுள் ஒன்று.

அங்காரகன் எனப்படும் செவ்வாய் வைத்தீசுவரன் கோயிலில் சிவபூசை புரிந்து நலம் பெற்றான்.

புதன் திருவெண்காடு என்னும் தலத்தில் சிவபூசை செய்து வாழ்வு பெற்றான்.

பிரகஸ்பதி எனப்படும் வியாழன் ஆலங்குடி என்னும் தலத்தில் சிவ பூசை புரிந்து வரம் பெற்றார். இத்தலம் தேவாரத்தில் இரும்பூளை என்று வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளி எனப்படும் சுக்கிராச்சாரியார் வாமனனால் குருடாக்கப்பட்ட பின்பு சிவபூசை புரிந்து பார்வை பெற்றார். திருமயிலை, சுக்கிராச்சாரியார் சிவபூசை செய்து கண் பெற்ற தலமாகும். கபாலீசுவரர் கோயிலுக்கு அடுத்து உள்ளது வெள்ளீசுவரர் திருக்கோயில்.

திருநள்ளாறு, சனி சிவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலமாகும்.

சீர்காழி, நாகேஸ்வரம், காளஹஸ்தி போன்ற தலங்கள் ராகு வழிபட்டு நலம் பெற்ற தலங்கள். காளஹஸ்தி, சீர்காழி, கீழ்ப்பெரும்பள்ளம் ஆகியவை கேது சிவபூசை புரிந்து வாழ்வு பெற்ற தலங்கள்.

**திருமாலின் அவதாரங்கள் வழிப்பட்ட தலங்கள்**

ஆமையாகப் பிறந்த திருமால் வழிபட்ட தலம் திருக்கச்சி. பரமேசுவரனுக்கு கச்சபேசுவரர்,

கச்சாலீசுவரர் என்று திருப்பெயர்கள். ஆமை யோட்டை அணிந்து சிவன், திருமாலை ஆமையி லிருந்து வெளியேற்றி அருள்புரிந்தார்.

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க என்று தமிழிசை வளர்த்த திருஞான சம்பந்தர் போற்றுகின்றார். பன்றியாக (வராகம்) பிறந்த திருமால் வழிபட்ட தலம் திருச்சிவபுரம். பரமேசுவரன் பன்றிப்பல்லை அணிந்து திரு மாலைப் பன்றிப் பிறப்பிலிருந்து வெளியேற்றி னான்.

வென்றி கொள் எயிற்று வெண் பன்றி
முன் நாள் சென்று அடி வீழ் சிவபுரமே

என்று தமிழிசை வேந்தர் திருஞானசம்பந்தர் போற்று கிறார்.

ஆகாயத்தை மண் என்று அளந்த குற்றத் திற்காகவும், தானம் செய்த மகாபலிக்குத் துரோகம் செய்த குற்றத்திற்காகவும் துன்பம் அடைந்த வாமனன் தினமும் நியமத்தோடு விரதம் இருந்து சிவபூசை செய்து வழிபட்டு நலம் பெற்ற தலம் மாணிகுழி, கண்ணார்க் கோயில் போன்றவை.

நித்த நியமத் தொழிலனாகி நெடுமால்
குறளனாகி மிகவும் சித்தம் அது ஒருக்கி
வழிபாடு செய நின்ற சிவலோகன்
குறுமாண உருவன் தற்குறியாகக் கொண்டாடும்
கறுமா கண்டன

என்று தமிழ்வளர்த்த திருஞானசம்பந்தர் பாடுகின்றார்.

பரசுராமர் சேரநாடு எங்கும் (கேரளம்) சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார். இவற் றுள் புகழ்வாய்ந்தது திருவஞ்சைக்களம்.

பத்தி செய்த அப்பரசுராமற்குப்
பாத நிழல் காட்டியவாறு

என்று சுந்தரர் போற்றுகிறார்.

இராவணனை வெல்வதற்காகவும் இராவண னைக் கொன்ற பழிநீங்கி நலம் பெறுவதற்காகவும் இராமன் சிவலிங்க பூசை செய்த தலம் இராமேஸ் வரம். இது இராமன், சீதை, இலட்சுமணன், அனுமன் ஆகிய அனைவரும் வழிபட்ட தலமாகும். இது மட்டு மன்றி இராமன் திருவுசாத்தானம், திருக்காளத்தி, பாலைத் துறை, இராமனதீச்சுரம், திருமறைக்காடு போன்ற தலங்களையும் வழிபட்டுச் சென்றான். ஜாம்பவான், சுக்கிரீவன், அனுமன் ஆகியோரும் திருவுசாத்தானத்தை வழிபட்டுச் சென்றுள்ளனர்.

நீரிடைத் துயின்றவன் தம்பி நீள் சாம்பவான்
போருடைச் சுக்கிரவன் அனுமான் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்த எம்
சீருடைச் சேடர் வாழ் திருவுசாத்தானமே.

என்பது தேவாரத்துதி.

மகன் அநிருத்தன் காணாமல் போனபோது கண்ணனும் ருக்மினியும் திங்கட்கிழமை விரதம் இருந்தது சிவபூசை செய்து மைந்தனை உயிரோடு மீட்டனர். கண்ணன் வழிபட்ட தலங்கள் கிருஷ்ண கிரி உட்பட பலப்பல உள்ளன. கண்ணன் உப மன்யூ முனிவரிடம் சிவதீட்சை பெற்று நாளும் சிவபூசைபுரிந்து வந்தான்.

கடவுள் எல்லாமாகவும் எல்லாவற்றுடனும் எல்லாவற்றிலிருந்து வேறுபட்டும் விளங்குபவர். இதை 'எல்லாமாகி வேறாய் உடனாய்' என்று தத்துவ சாத்திர நூல்கள் கூறுகின்றன. அதாவது எங்கும் சிவம், எதிலும் சிவம், எல்லாம் சிவம். பூவில் உள்ள மணம் போன்று பரமன் எங்கும் நிறைந்து விளங்கு கின்றான். இறைவன் எல்லாமாக இருப்பதை ஐம்பூத வடிவம் விளக்குகின்றது. மண், நீர், காற்று, நெருப்பு, வானம் என்று பஞ்சபூத வடிவாகத் திகழ்ந்து எல்லாமாக உள்ளார். பஞ்சபூத வடிவில் விளங்கும் தலம் பஞ்ச பூதத் தலங்கள் எனப் படுகின்றன.

## பஞ்சபூதத் தலங்கள்

*மண்:-* பரமேசுவரன் காஞ்சிபுரத்திலும் திரு வாரூரிலும் மண் வடிவாய் அருள்புரிகின்றான். பராசக்தி காஞ்சிபுரத்தில் மண்ணால் சிவலிங்கம் உருவாக்கி வழிபட்டாள். நாள்தோறும் தர்மங்கள் செய்து சிவபூசை புரிந்த காமாட்சி அன்னைக்குப் பரமேசுவரன் மண்லிங்கத்திலிருந்து வெளிப் பட்டுக் காட்சி தந்தான். திருவாரூரில் புற்றிலிருந்து வெளிப்பட்டு வானவர்களுக்குக் காட்சி தந்தான். இதனால் புற்றிடங்கொண்ட பெருமான் என்று பெயர்.

*நீர்:-* பரமேசுவரன் திருவானைக்காவில் நீராக எழுந்தருளி காட்சி தருகின்றான். வடக்கே அமர நாதத்தில் நீர் லிங்கம் அதாவது பனி லிங்கம் புகழ் பெற்ற ஒன்று. திருவானைக்கா சிலந்தியும் யானை யும் வழிபட்ட தலமாகும். யானை பிறவி நீங்கி முக்தி பெற, சிலந்தியைப் பரமன் கோச்செங்கண் சோழனாகப் பிறப்பித்தான். இமயம் வரை வென்று இமயத்தில் புலிக்கொடி நாட்டிய இச்சோழன் எழு பது பெருங்கோயில்களை நாடெங்கும் கட்டினான்.

**நெருப்பு:-** 'கல்லுயிராய் நின்ற கனலே போற்றி' என இறைவன் நெருப்பாக நின்று மலையாக அமைந்த தலம் திருவண்ணாமலை. ஆதியும் அந்தமும் இல்லாத ஜோதிலங்கத்தின் அடிமுடி காண்பதில் பிரம்மனும் விஷ்ணுவும் தோல்வி கண்ட பின்னர் இருவரும் பக்தியோடு தொழுத போது பரமசிவன் ஜோதிலிங்கத்திலிருந்து வெளிப் பட்டுக் காட்சி தந்த பிறகு அந்த நெருப்புத்தூண், ஜோதிலிங்கம் கல்லாக, மலையாக நிலைத்து அமைந்தது.

மால் அறியா நான் முகனும் காணா மலை

என்று திருவாசகம் போற்றுகின்றது

**காற்று:-** இறைவன் காற்றாக இருந்து அருள் புரியும் தலம் காளத்தி. சிலந்தி, பாம்பு, யானை ஆகியவையும் வழிபட்டு நலம் பெற்ற தலமாகும். கண்ணப்பர் அருள் பெற்ற தலம். கண்ணப்பனும் சிவகோசரியாரும் வழிபட்ட சிவலிங்கம் மலை மேல் உள்ளது.

**வானம்:-** இறைவன் வெளியாக, வானமாக விளங்குவது சிதம்பரத் திருத்தலம். அசைவிற்கும் இயக்கத்திற்கும் காரணமான ஐந்தொழில் புரியும் அம்பலவாணன் அருள் புரியும் அற்புதத் தலம்.

**சப்த விடங்கத்தலங்கள்:-** பரமேசுவரன் பராசக்தியுடனும் முருகனுடனும் எழுந்தருளியுள்ள கோலத்திற்கு விடங்கர் அல்லது சோமாஸ்கந்தர் என்று பெயர். இத்திருவுருவத்தை விஷ்ணு வழிட்டு வந்தார். விஷ்ணுவிடமிருந்து இந்திரன் வாங்கிச் சென்றான். வானலோகம் சென்ற முசுகுந்தச் சோழ மன்னனிடம் இந்திரன் வேண்டியதை எடுத்துப் போகச் சொன்னான். சிவபக்தனான முசுகுந்தன் விடங்கப் பெருமானைக் கேட்டான். தர விருப்பம் இல்லாத இந்திரன் அதைப் போன்ற ஆறு உருவங்களை உண்டாக்கி ஏழினையும் முசுகுந்தன் முன் வைத்து ஒன்றை எடுத்துக் கொள்ளுமாறு கூறினான். ஆதி விடங்க மூர்த்தி வெளிப்பட்டுக் காட்சி தந்ததால் முசுகுந்தன் முதல் வடிவத்தைக் கண்டெறிந்தான். இந்திரன் மற்ற ஆறு உருவங்களையும் முசுகுந்த னுக்கே கொடுத்து ஏழினையும் எடுத்துப் போகச் சொன்னான். முசுகுந்தன் ஆதி மூர்த்தியைத் திருவாரூரிலும் மற்ற ஆறு வடிவங்களை ஆறு தலங் களிலும் பிரதிட்டை செய்து வழிபட்டான். இந்த ஏழு தலங்களும் சப்தவிடங்கஸ்தலம் எனப்படும். திருவாரூர், திருநாகை, திருநள்ளாறு, திருக்கோளிலி, திருவாய்மூர், திருக்காறாயில், திருமறைக்காடு ஆகியவை சப்த விடங்கத்தலங்களாகும்.

பரமன் வீரத்திருவிளையாட்டுகளைப் புரிந்த எட்டு தலங்கள் அட்ட வீரத்தலங்கள் எனப்படு கின்றன.

**1. திருவதிகை:-** இது இறைவன் சிரிப்பிலே முப்புரங்களை எரித்து முப்புராதியர்களுக்கு அருள் புரிந்த தலம். மலையை வில்லாக வளைத்து திருமாலை அம்பாகத் தொடுத்த போது சிரிப்பால் புரம் எரித்த காரணத்தால் கையில் இருந்த ஒரே அம்பும் மிகையாக, அதிகமாக இருந்ததால் இத்தலம் அதிகை எனப்பட்டது.

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில்
ஓரம்பே முப்புரம் உந்திபற
ஒன்றும் பெருமிகை உந்திபற

என்று திருவாசகம் போற்றுகின்றது

**2. குறுக்கை:-** மன்மதனை எரித்த தலம்.

**3. கடவூர்:-** மார்க்கண்டேயருக்காக காலனை வதைத்த தலம்.

**4. கண்டியூர்:-** பிரம்மனது தலைகளுள் ஒன்றைக் கொய்த தலம்.

**5. கோவலூர்:-** அந்தகாசுரனை வதைத்த தலம். பராசக்தி ஒரு நாள் பரமேசுவரனின் இரு கண்களையும் விளையாட்டாகப் பொத்தினாள். உலகம் முழுவதும் இருளில் ஆழ்ந்தது. அண்ட சராசரங்கள் இருளில் மூழ்கித் தவித்தபோது பரமசிவன் நெற்றியில் ஒரு கண்ணைத் தோற்றுவித்து உலகங்களுக்கு ஒளி வழங்கினார். உலகங்கள் இருண்ட போது இருட்டிலிருந்து உற்பத்தியானவன் அந்தகாசுரன். நெற்றிக் கண்ணால் உலகங்களுக்கு ஒளி தந்த இறைவன் அந்தகாசுரனைத் திரிசூலத்தில் கோத்து முடிவுதந்தார்.

**6. விற்குடி:-** சலந்தரனை வதைத்த தலம். சலந்தரன் முன் கிழவேதியராக வந்த பரமன் கால் விரலால் மண்ணில் வட்டம் போட்டார். சலந்தரன் அவ்வட்டத்தைப் பெயர்த்து எடுக்க முற்பட்டபோது அது சக்கரமாகி சலந்தரன் தலையை வெட்டியது. இந்தச் சக்கரத்தைப் பெறுவதற்காக விஷ்ணுநாள்தோறும் ஆயிரம் தாமரைகளால் சிவபூசை செய்து ஆயிரம் பெயர்கள் ஓதி அர்ச்சனை புரிந்து வந்தார். ஒரு நாள் ஒரு பூ குறைந்தபோது தன் கண்ணையே பறித்து மலராக வைத்து சிவபூசையை முடித்தார். திருமாலின் பக்தியைக் கண்ட பரமன் அவர் வேண்டிய சக்கரத்தைத் தந்து அருள் புரிந்தான்.

**7. வழுவூர்:-** யானையை உரித்து அதன் தோலைப் போர்த்துச் கொண்ட தலம்.

**8. பறியலூர்:-** தக்கன் செய்த ஆணவம் மிக்க, பக்தி யற்ற வேள்வியை அழித்து தக்கனுக்கு ஆட்டுத்தலை அருளிச் செய்த தலம்.

**பன்னிரு ஜோதிலிங்கத் தலங்கள்**

பாரதநாட்டின் ஒற்றுமைக்கும் உயர்வுக் கும் மையக்காரணமாகத் திகழ்வது பரம்பொருள் பரமேசுவரன் கடவுள் வழிபாடு. இமயம் முதல் குமரி வரையில் ஜோதிலிங்கத் தலங்கள் பரவியுள்ளன. காசியும் இராமேஸ்வரமும் எல்லா பேதங்களை யும் கடந்து சென்று மக்களைப் பக்தியால் பிணைத்து வைக்கும் இறுக்கமான அற்புதப் பிணைப்பாகும்.

**1. சோமேஸ்வரம்:-** இது குஜராத்தில் வீராவலி என்ற ஊரில் உள்ள கடற்கரைத் தலம். சந்திரன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, தக்கனால் ஏற்பட்ட சாபம் நீங்கி நலம் பெற்ற தலம்.

**2. காசி:-** உத்திரப்பிரதேசத்திலுள்ள புண்ணியத் தலம். கங்கை நதிக்கரையில் உள்ளது. விஷ்ணு வழிபட்ட தலம்.

**3. திரியம்பகேசுவரம்:-** மகாராஷ்டிரத்தில் நாசிக்கில் உள்ளது. பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் மகா ருத்ரனை, மகாதேவனை வழிபட்டு நலம் பெற்ற தலம். கௌதம முனிவர் கோடி லிங்கார்ச்சனை செய்தது. கோதாவரி நதிக்கரையில் இத்தலம் உள்ளது. கங்கை பாய்வதற்குக் காரணமாக இருந்தவன் பகிரத மன்னன். கோதாவரி பாய்வதற்குக் காரணமாக இருந்தவர் கௌதம் முனிவர்.

**4. நாகேஸ்வரம்:-** மகாராஷ்டிரத்தில் தாருகா வனத் தில் உள்ள தலம்; ராகுவும் கேதுவும் பூசை புரிந்து வரம் பெற்ற தலம். அசுரர்களாகப் பிறந்த இவர்கள் நவ கிரகங்களாகப் பெருமை பெற்றனர்.

**5. இராமேஸ்வரம்:-** பராசக்தி சிவலிங்கப் பிரதிட்டை செய்து குங்குமப் பூவால் பரமனை வழிபட்ட தலம். குஷ்மா என்ற பெண்ணடியவளுக்கு அருள்புரிந்த தலமாதலால் குஷ்மேஸ்வரம் என்றும் அழைக்கப் படும். இத்தலம் எல்லோராவில் உள்ளது.

**6. பரலிவைஜயநாதம்:-** தேவாசுரப் போரின் போது தேவர்கள் தங்களுக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்று சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசை புரிந்த தலம். ஈசுவரன் வைஜயநாதன் என்று அழைக்கப்படு கின்றான். இத்தலம் மகாராஷ்டிரத்தில் நாகேஸ்வரத் துக்கு அருகே உள்ளது.

**7. ஓங்காரேசுவரம்:-** ஓங்கார ஒலி வழிபட்ட தலம், இது நர்மதையாற்றங்கரையில் உள்ளது. இறைவன் ஓங்காரேசுவரன், அமலேசுவரன் என்று அழைக்கப் படுகின்றான். நர்மதையாற்றின் இரு கரைகளிலும் எதிரெதிராக இரண்டு கோயில்கள் உள்ளன. அமலேசு வரர் பழைமையானவர். ஓங்காரேசுவரர் கோயில் பின்னால் வந்தது. விந்தியமலையும் மந்தாதர என்ற மன்னனும் ஒரே சமயத்தில் தவம் செய்து சிவலிங்கப் பூசை செய்து காட்சி பெற்ற தலமாதலால் இத் தலம் இரட்டைக் கோயிலுடன் விளங்குகின்றது.

**8. கேதாரம்:-** இமயமலையில் கங்கைக் கரையில் உள்ள தலம். நரன், நாராயணன் என்ற இரட்டையர் கள் சிவலிங்கப் பூசை செய்து வாழ்வு பெற்ற தலம். கிருஷ்ணனும் பாண்டவர்களும் பூசை செய்த தலம்.

**9. உஜ்ஜயினி மகாகாளம்:-** காளி சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசை புரிந்து கோபம் அடங்கப் பெற்ற தலம். வேதபிரதன் என்ற அந்தணக் குடும் பத்தார் சிவபூசை புரிந்து நாட்டையும் மன்னனை யும் காத்த தலம்.

**10. திருப்பருபதம்:-** முருகன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்த ஊர். திருமகள் வழிபட்டு நலம் பெற்றதால் ஸ்ரீசைலம் எனப் பெயர் பெற்றது. பல பிறவிகள் எடுத்து உழலவேண்டும் என்று துர்வாச முனிவர் திருமாலுக்கு சாபம் இட்ட போது திரு மகள் சிவபூசை புரிந்து பத்துப் பிறவியாகக் குறைத் தாள்.

**11. பீமசங்கரம்:-** கும்பகர்ணனின் மகன் பீமன் வழிபட்டு வரம் பெற்ற தலம். பூனாவில் மலைமேல் உள்ளது.

**12. இராமேஸ்வரம்:-** இராமன் சிவலிங்கப் பிர திட்டை செய்து சிவபூசை புரிந்து இராவணனை வெல்லும் ஆற்றலும் பெற்றதோடு இராவண னைக் கொன்ற பழியும் நீங்குவதற்காக சிவபூசை புரிந்த தலம்.

★★★

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி V. தியாகராஜன்

### மக்கள் பிறந்தனர்!

கோசல நாட்டுப் பெருமைகளையும் மக்கள் யாவரும் குணக்குன்றுகளாக விளங்கக் கூடியவர்கள் என்றெல்லாம் அவர்கள் சிறப்பினைக் கூறிய கம்பன் - இவ்வளவு பெருமைகள் உள்ள நாடு நகரங்களுக்கு அரசன் - சக்ரவர்த்தி (அரசர்க்ரசன்) அவன் ஏழு உலகங்களுக்கும் அரசன் எனக் கூறி, யாவற்றுக்கும் மேலாக, இந்த ராமகதைக்குத் தலைவனான இராமபிரானை உலகத்திற்கு தந்த தருமமூர்த்தி எனக் குறிப்பிடுகிறான்.

உலகங்களை எல்லாம் அரசாட்சி செய்யும் அவனுக்கு ஒரு மனக்குறை. மனக்குறை இல்லாதவர் யார்? தசரதனுக்கு மக்களில்லையே என்ற மனக்குறை. அந்த மனக்குறை கூடச் சுயநல மற்ற மனக்குறை. ''தவஞ்செய்யும் பெரியோர்களும், வேதியரும் இன்பமாக அடியேனுடைய அரசாட்சியில் வாழ்ந்து வருகின்றனர். எனக்குப் பின் அவர்களை உள்ளன்புடன் பாதுகாக்க ஒரு அரசன் இல்லையே!'' என்று தன் மனக்குறையை

அருந்தவ முனிவரும் அந்தணா ளரும்
வருந்துத லின்றியே வாழ்வின் வைகினார்;
இருந்து துயருழக்குநர் எற்பின் என்பதோர்
அருந்துயர் வருத்தும் என் அகத்தை என்றனர்.

முக்காலமுணர்ந்த முனிவரான வசிட்டர் இதைக் கேட்கும்போதே இராவணாதி ராட்சதரின் கொடுமை தாங்காது தேவர்கள் பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமானை வழிபட்டுத் தமது குறைகளைக் கூற, இறைவன் கருணை கொண்டு ''பேய்களை தேரில் பூட்டி ஓட்டக்கூடிய அரக்கர்களை நாசமாக்க நாற்படைகளையுடைய தசரதன் மகனாக உலகில் வருவோம்.'' என

மசரதமனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளால் நீறு செய்யயாம்
கசரத துரகமாக்கடல் கொள்காவலன்
தசரதன் மைந்தனாய் வருதும் தாரணி.

என்று திருமால் தேவர்கட்கு அடைக்கலமளித்த செய்தியை மனக்கண்ணால் நோக்கி ''தசாத! உனக்கு அருமையான மக்கள் பிறப்பர். கவலையுறாதே,'' அதற்கு கலைக்கோட்டு மாமுனிவர் என்ற பெரியவரைக் கொண்டு ஒரு வேள்வி செய்ய வேண்டும்'' என்று கூறி ''ரோமபாதன் என்ற அரசனுடைய நாட்டில் மழையில்லாதிருந்து, கலைக்கோட்டு மாமுனிவர், நெற்றியில் ஒற்றைக் கொம்பை உடையவர். பெண்ணென்றால் என்னவென்றே தெரியாத பிரமசாரி. அவர் வந்தால், அவர் திருவடியிலுள்ள ரேகையின் விசேடத்தால், அவர் திருவடி பட்ட இடத்தில் மழை பெய்யும்'' என்று அவரது விவரமான வரலாறு கூற, ரோமபாதன் அப்பெரியவரை தன் நாட்டிற்கு அழைத்து வந்தான். நன்கு மழை பெய்து நாடு செழித்தது. அவர் ரோமபாதராசனுடைய மகளான சாந்தை என்பவளை மணந்து அங்கேயே உள்ளார். அவரை அயோத்திக்கு அழைத்து வந்து யாகம் செய்வாயாக'' எனக் கூற, தசரதர் ரோமபாதனின் ராஜ்யத்தை அடைந்து கலைக்கோட்டு மாமுனிவர் என்ற ரிஷ்யஸ்ருங்கமுனிவரை அழைத்து வந்து மைந்தரை **அளிக்கும் வேள்வி**யான புத்திர காமேஷ்டி என்னும் யாகம் செய்கிறார்.

உலகத்தில் எவரையாவது ரொம்பப் பெரியவரோ எனப் பேசும் போது **''அவர் நெற்றியில் கொம்பா முளைத்திருக்கிறது?'', ''அவன் பெரிய கொம்பனோ''** என்று பேசுவர். நெற்றியில் கொம்புள்ள கலைக் கோட்டு முனிவர் வந்தால் தான் இராமபிரான் பிறந்தார் என்ற கருத்தில் மேற்படி வார்த்தைகள் பழக்கத்தில் வந்தன (கலைக்கோட்டு முனிவர் இருந்த இடம் **ஸ்ருங்கேரி** எனத் தற்காலம் விளங்குகிறது) கலைக்கோட்டு மாமுனிவர் செய்யும் வேள்வித் தீயினின்றும் தோன்றிய தெய்வீக புருடன் ஒரு பாயச கலசத்தை வைத்து மறைந்தான். கலைக் கோட்டு மாமுனிவர் ''இதை உன் மனைவியர் மூவருக்கும் முறைப்படி பகிர்ந்தளிப்பாயாக'' என்றார். முறைப்படி என்று கூறியதால் தசரதர் பாதிப் பங்கை கௌசலைக்கும், கால் பங்கை சுமித்திரைக்கும், அரைக்கால் பங்கை கைகேயிக்கும் கொடுத்து, மீதமிருந்த அரைக்கால் பங்கை மீண்டும் சுமித்திரைக்கும் அளித்தார். வேள்வி முடிந்து கலைக்கோட்டு முனிவர் தனது இருப்பிடம் சென்றார்.



தேவியர் மூவரும் கருப்பமடைந்தனர். "உலகை மெல்லாவற்றையும் தன் வயிற்றிலடக்கிக் காத்த திருமால் (**உலகு யாவையும் மன்வயிற்றின் அடக்கிய மாயன்** எனக் கவிஞர் வேறோரிடத்தில் குறிப்பார்) எந்த வேதாந்த சித்தாந்தங்களாலும் விவரிக்க முடியாத பரம்பொருளை, நீல சோதியை கௌசலை பெற்றெடுத்தாள் என இராமாவதாரம் கூறுகிறது.

ஒரு பகல் உலகெலாம் உதரத்துட் பொதிந்து
அருமறைக்கு உணர்வரும் அவனை: அஞ்சலக்
கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

இறைவனைப் பொதுவாக சோதி என்றே குறிப்பிடுவர். **உயர நின்றதோர் சோதி** என இராம பிரானை நம்மாழ்வாரும், **தீபமங்கள ஜோதி** என முருகப் பெருமானை அருணகிரியாரும், **நிறைந்த சோதி** என திருவிளையாடற் புராணமுடையாரும் கூறுவர். மக்களில்லாமையால் வேறுபட்ட ரிஷிகளை தசரதன் நியமித்துக் கொள்ளலாம். அதனால் கௌசலையின் செல்வாக்கு **(திரு)** குறையலாம், அவ்வாறு நேராவண்ணம் அவள் திருவயிற்றில் பிறந்து கௌசலையின் திரு அவளிடமே **(திருவுற)** இருக்குமாறு இராம பிரான் அவளது திருவயிற்றில் பிறந்தார் என்பர். **திருவான** இலக்குமி சீதையாக உற்று அடையும் படியான பேற்றையளிக்க இராம பிரான் பிறந்தார் என்றும் **திருவுற** என்ற சொல்லுக்குப் பொருள் கொள்ளுவர்.

இராமபிரான் சூரிய குலத்தில் பிறந்தார். எல்லாத் தேவர்களும் மகிழ்ச்சியடைய சந்திரன் தனக்கு எந்த விதமான பெருமையும் இராமாவதாரத்தில் இல்லையோ என வேதனையுற, இராமபிரான் சந்திரனிடம் "அடுத்த அவதாரம் சந்திரன் உச்சமாக வரும் ரோகிணியில் எடுக்கிறேன். இந்த அவதாரத்தில் **இராமச்சந்திரன்** என உலகத்தோர் அழைக்கட்டும் என சந்திரனுக்கு இறைவன் வரமளித்தார் என்பார். ஒரு மகாத்மா **கார் மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்** என்ற வரிக்குப் பொருள் கூற வந்த ஒரு பெரியவர் **அடியார்களிடம் சந்திரன் போன்ற குளிர்ச்சியையும் அல்லாதவர் பால் சூரியன் போல் வெப்பமான பார்வையை உடையவர்** எனப் பொருள் கண்டார்.

சந்திரனிடம் களங்கம் (முயற்கறை) உண்டு. ஒளிமிகுந்த இராமச்சந்திரனின் வாழ்க்கையில் வாலியை மறைந்து நின்று அம்பெய்தார் என்ற ஒரு குற்றம் காரணமாகவே இராமச்சந்திரன் எனப்பெயரிட்டனர் என்பர் சிலர். சந்திரன் வெண்மையான தன் இதயத்தில் கருநிறமுள்ள இராமபிரானை வைத்துள்ளான். வெண்ணிறச் சந்திரனிடம் கருஞ்சோதியாகப் பிரகாசிக்கிறான் இராமபிரான். எனவே

அதைக் களங்கமென்றே அழைக்கக் கூடாது என்பர் ஒருபக்தர்.

முதலையின் வாயில் அகப்பட்ட யானை ''அராவணையில் துயில்வோய்!'' (சர்ப்பசயன மூர்த்தியே!) என அழைத்ததாம். சயன மூர்த்தியே (தூங்கு பவனே!) என அழைத்த போதிலும் இறை வன் தாமதிக்கவே இல்லையாம். வெகுவிரைவில் சென்று யானையைக் காத்தார். அவ்வாறு ஓடிவந்து காத்த உத்தம தெய்வம் பிறந்தவுடன் 'ராம' எனப் பெயரிட்டனர் எனக் கூறினார்.

கராமலையத் தளர்கைக் கரியெய்த்தே
அராவணையில் துயில்வோய் என அந்நாள்
விராவியளித்தருள் மெய்ப்பொருளுக்கே
இராமனெனப் பெயர் ஈந்தனரன்றே.

திருமாலாயிரம் (விஷ்ணு சகஸ்ரநாமத்தில்) ஒரு அழகிய ஸ்லோகம் உண்டு. மனத்துக் கினிய வனான பெருமானை ரம்யமான **ராம** என அழைத் தார். தயரதன் இனித்தனது வம்சம் தழைப்பதுடன் மக்களையும் பத்திரமாகப் பாதுகாக்கும் மகன் வந்து விட்டான் என்ற எண்ணத்தில் **ராமபத்ரன்** என அழைத்தார். தன் கண்ணும் மனமும் குளிருமாறு கிடைத்த மகனை கௌசல்யா தேவி **ராமச்சந் திரன்** என்றழைத்து மகிழ்ந்தாள். வசிட்டர் வேத நாயகனான நாராயணனே வந்தான் என அறிந்து **வேதசே** என அழைத்தார். ரகுமகாராஜன் காலத்தி லிருந்து மந்திரியாயிருந்த சுமந்திரன் இறைவன் இராமபிரானாக வந்ததை அறிந்து **ரகுநாதா** என அழைத்தார். சீதாபிராட்டி நாதா என அழைத்தும் ஜனமகாராஜன் **சீதாபதி** என அழைத்தும் மகிழ்ந்த னர். மற்ற மக்களுக்குப் பெயர் சூட்டிய பெரு மையை **''இராமனெனப் பெயர் ஈந்தனரன்றே''** என்று இராமனைக் கூறிய பின் **இலக்குவன் என்ன இசைத்தனரன்றே''** என்றும் **''பரதன் எனப் பெயர் பன்னினரன்றே''** என்றும் **''சத்துருக்கன் எனச் சாத்தினர் நாமம்''** என்றும் குறித்தார்.

குழந்தைகள் வளரும் பருவத்திலேயே அவர் களது விளையாட்டு, பேச்சு முதலானவற்றினால் பின்னாள் எப்படிப்பட்ட குணத்துடன் இருப்பார்கள் என அறிய முடியும். இராமபிரான் தன் தம்பி யான இலக்குவனுடன் அரண்மனை வாயிலில் நிற்கும் போது, அங்கு செல்லும் மக்களை அழைத்து ''எங்கு வேலை செய்கிறீர்? துன்பமில்லாதிருக்கின் றீர்களா? உமது வீட்டில் யாவரும் சுகமா?'' என அன்புடன் கேட்டார்.

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமார் ஒளிர
எதுவினை? இடரிலை? இனிது நும் மனையும்?
மதிதரு குமரரும் வலியர் சொல் எனவே?

நாட்டுமக்களின் நலனை அறிந்து காக்கும் ஒரு அரச னுடைய குணங்களையே காட்டுகின்றன இராம பிரானின் கேள்விகள். ''உன்னை அரசனாகப் பெற்ற எமக்கு என்ன குறையிருக்கும்?'' என மக்களும் மகிழ்ச்சியுடன் பதில் கூறினார்.

இராமபிரான் ஒரு வருடம் கௌசலையின் திருவயிற்றிலிருந்தார். இராமனைத் தாங்கிய அவளது வயிற்றை **கௌசலை தன் மணிவயிறு வாய்த்த வனே!** என்றார் ஆழ்வார். பக்தியே உருவமான கௌசல்யா தேவியின் திருவயிற்றில் அவளது பக்தியில் மயங்கி இறைவன் பத்துமாதத்திற்கு மேல் கூடவே இரண்டு மாதங்கள் தங்கிவிட்டான் என்றார் ஒரு பக்தர்.

நட்சத்திரங்களுக்கு அடையாளம் உண்டு. புனர்வசு நட்சத்திரத்திற்கு ஓடம் அடையாளமாகக் கூறுவர். அறியாமை, துயரம் என்னும் கடலில் மூழ்கும் மக்களைக் கரையேற்றி இன்பமளிப்பவர் தான் என் பதைக் காட்ட இறைவன் ஓடத்தை அடையாளமாக உடைய நட்சத்திரத்தில் பிறந்தான் என்பர். எந்த நாளும் நல்ல நாள் என்பதைக் காட்டு வதற்காகவே இராமபிரான் நவமியிலும் கண்ணன் அட்டமியிலும் பிறந்தான் என்பர். அட்டமி, நவமி, மார்கழி மாதம் 30 நாட்களும் தெய்வ சிந்தனை யுடனேயே இருக்க வேண்டுமென்பதற்காக அந்நாட் களில் திரு மணம் முதலானவை நடத்த வேண்டா மெனப் பெரியோர்கள் ஒரு நிபந்தனை வைத் தனர். சூரிய வம்சத்தின் அதிதேவதையான சூரிய பகவான் உச்ச நிலை பெற்று (சித்திரை மாதத்தில் மேட ராசியில் சூரியன் இருப்பது அவருக்கு மிகுந்த பலம் உடைமை என்பது சோதிடம் கூறும் உண்மை) விளங்கும் நேரத்தில் பிறந்து அருளினார்.

மக்களைப் பெற்ற மகிழ்ச்சியில் தசரதமகா ராஜன் ராஜசிங்கம் போல் மகிழ்ச்சியுடன் விளங்க, அவர் சபையிலே தவராஜசிங்கமாக விளங்கும் விசுவாமித்திரர் என்னும் முனிவர் தோன்றினார்.

★★★

(தொடரும்)

# நூல் மதிப்புரை

- அ. நிறைமதி

**நூல் பெயர் :** திருத்தொண்டருள் ஒரு சிறுத் தொண்டர்
**நூலாசிரியர் :** டாக்டர் கா.பெ. சந்திரசேகரன்
**பக்கங்கள் :** 432
**விலை :** ரூ. 75.00
**வெளியீடு :** **செம்மலர் பதிப்பகம்**
**AN 23, தாடண்டர் நகர்,**
**சைதாப்பேட்டை, சென்னை 600 015.**

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிஎச்.டி. பட்டத்திற்காக ஆய்வு செய்யப் பெற்ற அருந்தமிழ் நூலாகும் இது.

பெரிய புராணத்தில் மெய்யன்பர்கள் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்த ஒரு பெரும் வரலாறு, பிள்ளைக் கறி அமுது படைத்திட்ட சிறுத் தொண்டர் அருள் வரலாறு ஆகும்.

சிறுத்தொண்டர் வரலாற்றினை நுணுகி ஆய்ந்து, அரும் பெரும் விளக்கங்கள் பலவற்றை இவ்வாய்வு நூலில் தமிழன்பர்களுக்கு இலக்கிய அமிழ்தாக வழங்கியிருக்கிறார் ஆய்வறிஞர் முனைவர் கா.பெ. சந்திரசேகரன் அவர்கள்.

''மாமாத்திரர் மரபு யாது? இந்திய வரலாற்றின் திருப்புமுனையாக விளங்கும் வாதாபி வெற்றியின் மாண்பு யாது? படைத்தலைமைக்குப் பின் சோறிடும் திருத்தொண்டை சிறுத்தொண்டர் விரும்பி ஏற்றது ஏன்? திருவெண்காட்டு நங்கையின் பங்கு எத் தன்மைத்து? கணபதீச்சரம் கோயில் கட்டியது யார்? சிறுத்தொண்டரை நாடி வந்த பயிரவ அடியார் புறச்சமயமா? தொண்டர் தனி மாமகனை அமுது படைத்தது சிவநெறியா? இது போன்ற செயற்கரிய செய்த இறையடியார்கள் குறித்து உலக இலக்கியங்கள் கூறுவன யாவை? ஒவ்வோராண்டும் சிறுத் தொண்டர் அமுது படையல் விழாவும், நாடகமும் தமிழகத்தின் பல இடங்களில் நடைபெற்று வருவதற்குக் காரணம் என்ன? பிறமொழி பக்தி இலக்கியங்களில் சிறுத்தொண்டர் வரலாறு இடம் பெற்றுள்ள சிறப்பு யாது?'' - இவை போன்ற எண்ணற்ற கருத்துகளைக் கற்கண்டு நடையில், நுணுகி ஆய்ந்து ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என நூலாக வழங்கியுள்ள நூலாசிரியர் முனைவர் கா.பெ. சந்திரசேகரன் அவர்களின் இலக்கியப் பணி நிச்சயம் தமிழ்கூறு நல்லுலகின் போற்றுதலுக்குரியது என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள்

''பரஞ்சோதியார் மாமாத்திரர் குலத்தவர் என்று சேக்கிழார் பெருமான் கூறியதை ஒரு குலப்பெயராகத் தான் இதுவரை அனைவரும் நினைத்திருந்தனர். அது உண்மையில் தொழில் பற்றி வந்த குடிப்பெயர். அப்பெயரின் பழைய வடிவம் மகாமாத்திரர் என்பதாகும் என்பது இவ் ஆய்வாளரின் முடிவாகும். மகாமாத்திரர்கள் யானைப் படைத் தலைவர்கள் என்ற கருத்தை அசோகன் கல்வெட்டுக்கள் துணைக் கொண்டு ஆசிரியர் நிறுவியுள்ளார். இதுவரை யாரும் சிந்தியாத புதிய சிந்தனையாகும் இது'' என்று பாராட்டியிருப்பது கொண்டும், இந்நூற் - சிறப்பை நாம் உணரலாம்.

''பல ஆண்டுகளுக்குப் பின்னர் திரு கா.பெ. சந்திரசேகரனின் ''திருத்தொண்டருள் ஒரு சிறுத்தொண்டர்'' எனும் நூலைப் படிக்கும்போது தெ.பொ.மீ. அவர்களின் எறிபத்த நாயனாரின் வரலாறு குறித்த ''அன்பு முடி'' எனும் நூலைப் படித்த அன்று என்னுள் ஏற்பட்ட வியப்பும் மலைப்பும் தெளிவும் நிறைவும் என்னுள் அனுபவம் ஆவதை உணர்ந்தேன்'' என்று பாராட்டியுள்ளார் திருச்சி பாவேந்தர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் தலைவர் முனைவர் மா. இராமலிங்கம் அவர்கள்.

''தமிழகத்தில் தோன்றி இந்திய நாடு முழுவதும் புத்தொளி பரப்பிய பக்தி இயக்கம் பற்றியும், சிறுத்தொண்டர் மரபு பற்றியும், அவருடைய வரலாறு பற்றியும், கணபதி வழிபாடு பற்றியும், சைவசமயப் பிரிவுகள் பற்றியும், காலந்தோறும் சிறுத்தொண்டர் பற்றி எழுந்த கருத்துகள் பற்றியும் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து ஆசிரியர் பல அரிய செய்திகளை இந்த நூலில் வழங்கியிருக்கிறார்.'' என்று பாராட்டியுள்ளார் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையின் தலைவர் முனைவர் பொற்கோ அவர்கள்.

தமிழகத்திற்குக் கிடைத்த அமுது படையல் இவ்வரிய ஆய்வுநூல்.

## சிவனார் சூடியுள்ள பிறை நிலவினை அருணகிரிநாத சுவாமிகள் ''பூரணமதான திங்கள்'' எனப் பாடியிருப்பது ஏன்?

**வினா :** ''வீரமதன'' எனத்துவங்கும் பழமுதிர் சோலை தலத்துத் திருப்புகழ் பாடலில் 7-வது சீரில்,

''பூரண மதானதிங்கள் சூடுமரனாரிடங்கொள்
பூவைய ருளால் வளர்ந்த - முருகோனே''

எனப்பாடியுள்ளதில், சிவபெருமான் தன் சடாமுடியில் அணிந்தது பிறைச்சந்திரன் என்று நாயன்மார்களும் அருளாளர்களும் பாடியிருந்த போதிலும், அருணகிரியார் மட்டும் **பூரணமதான திங்கள்** என கூறியுள்ளது பொருத்தம்தானா? விளக்கம் அளிக்க வேண்டும்.

**விளக்கம் :** இச்சீருக்கு உரை எழுதினவர்கள், என்றும் தேயாது, வளராது ஒருதன்மையாயிருக்கும் திங்கள் - என கூறியுள்ளனர். இதேபோன்று கழுகு மலைத்திருப்புகழிலும்,

''கலைமதியப்புத்தரித்த வேணிய
ருதவிய வெற்றித் திருக்கை வேலவ,
கழுகுமலைக்குள் சிறக்கமேவிய பெருமாளே''

எனவும் பாடியுள்ளதை கவனிக்கலாம்.

தக்கன் தனது 27 பெண்களையும் சந்திரனுக்குத் திருமணம் செய்வித்த பிறகு கார்த்திகை, ரோகிணி என்ற மாதர்களிடத்து சந்திரன் அதிக பிரியம் காட்டினதால், தக்கன் கோபமுற்று, ''உன் கலைகள் எல்லாம் தேயக்கடவது'' எனச் சாபமிட்டான். சந்திரனது கலைகள் அவ்வாறே தேய ஆரம்பித்து ஒரு கலை எஞ்சி நின்ற சமயத்தில், சிவனைத் துதிசெய்ததால் திங்களைத் தமது சடையில் சூட்டிக் கொண்டு தக்கன் சாபம் நிறைவேறாது, அந்த ஒரு கலை மட்டும் தேயாது எஞ்சிநின்றது என்பதனை,

''எம்முடி சேர்த்திய சிறப்பால் அந்தமிலை
இக்கலை''

என (கந்தபுராணம் - சந்திரசாப - 44) பாடலில் பாடியுள்ளது கவனிக்கத்தக்கது.

ஆனால் இதற்கு வினோதமான பொருளை, அடியேனது தந்தையார் திருப்பு ழ் நூலுக்கு உரை கண்ட தணிகைமணி - வ. சு. செங்கல்வராய பிள்ளையிடம் கூறிய போது, அவர் அடைந்த ஆனந்தத்தின் மேலீட்டால், என் தந்தையாரை இறுகத் தழுவிக் கொண்டு, உமக்கு மேலும் அருணகிரிப் பெருமானே, தாம் இயற்றிய செய்யுள்களுக்கு அவ்வப்போது பொருள்விளங்காத இடத்து, தோன்றாத் துணையாயிருந்து, உரிய கருத்தினை விளக்கும் ஆற்றலைத் தந்தருள, உளமாரப் பிரார்த்திக்கிறேன் என்று வாழ்த்தியதைக் குறித்து என் தந்தையாரின் நாட்குறிப்பு புத்தகத்தில் எழுதியுள்ளதை, அடியேன் படித்தபோது என் கண்களில் நீர் பெருக உளம் புளகாங்கிதம் அடைந்தேன். என் தந்தையாருக்கு புலப்பட்ட உண்மைப் பொருள் விளக்கம்:-

எம்பெருமான் கயிலையில் நடனமாடும் சமயம், மிகவும் உற்சாகமாக உடனிருந்து கவனித்த உமாதேவியார் வியக்க, வேகமாக பம்பரம்போல் சூழன்று ஆடியதைப்பார்த்ததும், சடையில் அணிந்திருந்த பிறைச்சந்திரனும், சுழன்று ஆடும் நேரத்தில், முழுச் சந்திரனாக, உமாதேவியார் கண்ணுக்குப் புலப்பட்டதையே அருணகிரியார் உமனக்கண்ணால் நோக்கி அனுபவித்த பேரின்பக் காட்சியை எவரும் இதுகாறும் சொல்லாத நூதன பாணியில் பாடியுள்ளார்.

உதாரணத்திற்கு, ஒரு வட்டவடிவமான சக்கரத்தில் ஓர் இடத்தில் மட்டும் ஒரு சிறிய மின்சார பல்பைப் பொருத்தி, எரியச் செய்து, அச்சக்கரத்தை வேகமாக சுற்றினால், பார்வையாளர்க்கு சக்கரம் முழுதும் ஒளிமயமாகத் தோன்றுவதைக் காணலாம். அதுபோன்றே எம்பெருமான் வேகமாக சுழன்று ஆடுகையில் அந்த பிறைச்சந்திரன் முழுநிலாவாக தோன்றி இருத்தல் வேண்டும் என்பதனை, அருணகிரியார் மனக்கண்ணால் அனுபவித்துப் பாடியிருத்தல் கூடும் என்று பொருள்கொள்வது சிறப்பாக அமையும் எனக் கருதியே, தனது நாட்குறிப்பு புத்தகத்தில் எழுதியுள்ளனர். அன்னாரின் மகனான அடியேன் இதனை வெளியிடுவதில் பெருமைப் படுகிறேன்.

**திருப்புகழ்மாமணி மு. அருணகிரி**
திருப்புகழடிமை, கா.ரா. முருகேசனின் குமாரர்
சென்னை - 600 012.

★★★

# வினாவும் விடையும் - கௌமாரம்

(முருகன் தொடர்பானவை)

- டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன்

1) முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயத்தின் பெயர் என்ன?

2) முருகனின் தோற்றம் குறித்து, காளிதாசன் இயற்றிய நூல் எது?

3) தமிழில் கந்தபுராணத்தை இயற்றியவர் யார்?

4) ''பெரும் பெயர் முருகன்'' என்று போற்றிய புலவர் யார்?

5) தணிகைப் புராணத்தை இயற்றியவர் யார்?

6) 'வேல் வாங்கும் விழா' எங்குச் சிறப்பாக நடைபெறுகிறது?

7) இராமாயண மாயாவிகள் மாரீசன், சுவாகு, கந்த புராண மாயாவிகள் யாவர்?

8) சூரபதுமனின் நகரம் எது?

9) சூரனின் பட்டத்தரசி யார்?

10) சூரன் வைத்திருந்த தேரின் பெயர் என்ன?

11) கந்தர் சஷ்டி கவசத்தை இயற்றியவர் யார்?

12) அது எங்கு இயற்றப்பட்டது?

13) கந்த புராணத்தில் எந்த சிவபக்தரின் வரலாறு இடம் பெற்றுள்ளது?

14) சூரனின் தங்கை யார்?

15) 'திருச்சீர் அலைவாய்' என்ற தலத்தின் தற்காலப் பெயர் என்ன?

16) தெய்வ மணிமாலை எந்தத் தலத்து முருகனைப் போற்றுகிறது?

17) சுவாமி மலை நவரத்தின மாலையின் ஆசிரியர் யார்?

18) உத்தர சுவாமிமலை எங்குள்ளது?

19) முதலில் காவடி எடுத்தது யார்?

20) முருகனின் தூதுவர் யார்?

21) சூரசம்காரப் போர் எத்தனை நாள் நடந்தது?

22) திருச்சாய்க்காட்டு வேலனின் தனிச் சிறப்பு என்ன?

23) எந்தத் தலத்தில் அறுபது தமிழ் வருடங்கள் படிக்கட்டுகளாக அமைந்துள்ளன?

24) 'கோடை நகர்' என்ற திருப்புகழ்த் தலத்தின் தற்காலப் பெயர் என்ன?

25) கந்தர் அலங்காரத்தில் பல முறை குறிப்பிடப்படும் தலம் எது?

26) குமரகுருபரர் இயற்றிய முருகன் பிள்ளைத் தமிழ் எந்த ஊர் முருகனைப் போற்றுகிறது?

27) திருமாலின் கண்ணீரிலிருந்து தோன்றி முருகனைக் கணவனாக அடையத் தவம் செய்த இருபெண்கள் யாவர்?

28) முருகன் உதித்த நட்சத்திரம் எது?

29) 'திருப்போரூர் சந்நிதி முறை' இயற்றியவர் யார்?

30) 'பிரணவ உபதேச லீலை' எங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது?

31) முருகனின் கண்கள் எத்தனை?

32) ''வாங்கும் எனக்கு இருகை - அருளை வழங்கும் உனக்குப் பன்னிருகை'' இதைப் பாடியவர் யார்?

33) எத்தலத்து முருகன் சங்கீத மூர்த்தி முத்து சுவாமி தீட்சிதருக்கு அருள் செய்து பாட வைத்தான்?

34) 'ஹேமகூடம்' என்ற தலத்தின் தற்காலப் பெயர் என்ன?

35) பத்துப்பாட்டிலும், சைவத் திருமுறையிலும் இடம் பெற்றுள்ள நூல் எது?

36) 'காவடிச் சிந்து' பாடிப் புகழ் பெற்ற கவிஞர் யார்?

37) 'குமாரஸ்தவம்' பாடியவர் யார்?

38) முருகன் அருணகிரி நாதருக்குச் செய்த உபதேசம் என்ன?

39) சுருட்டு நிவேதிக்கப்படும் தலம் எது?

40) தீட்சிதர் கிருதி கழுகுமலையை எப்பெய ரால் குறிப்பிடுகிறது?

41) 'திருவாவினன் குடி'யின் தற்காலப் பெயர் என்ன?

42) இலங்கை மாவிட்டபுரம் கோயிலுக்குத் தமிழகத்திலிருந்து முருகன் திருமேனி சென்று இறங்கிய துறை எது?

43) 'குளத்தில் தோன்றியவன்' என்ற பொரு ளில் முருகன் பெற்ற பெயர் என்ன?

44) முருகன் நாகாபரணத்துடன் காட்சி தரும் ஒரு தலம் எது?

45) சிக்கல் முருகனின் சிறப்புப் பெயர் என்ன?

46) ஆறுமுகன் கருவறையிலேயே ஈசனின் இலிங்கத் திரு உருவம் உள்ள தலம் எது?

47) முருகன், வள்ளி, தெய்வயானை மூவரும் தனித்தனியே மயிலில் அமர்ந்து காட்சி தரும் இரு தலங்கள் எவை?

48) சுவாமி மலை இயற்கை மலையா?

49) முருகன் - தெய்வயானை திருமணம் எங்கு நடைபெற்றது?

50) அப்போது பூவுலகை ஆண்ட மன்னன் யார்?

## விடைகள்

1) கௌமாரம்

2) குமாரசம்பவம்

3) கச்சியப்ப சிவாச்சாரியார்

4) நக்கீரர்

5) கச்சியப்ப முனிவர்

6) சிக்கல்

7) வில்வலன், வாதாபி

8) வீரமகேந்திரபுரம்

9) பதுமகோமளை

10) இந்திரஞாலம்

11) தேவராய சுவாமிகள்

12) சென்னிமலை

13) மார்க்கண்டேயர்

14) அசமுகி

15) திருச்செந்தூர்

16) சென்னை - கந்தகோட்டம்

17) கடுக்கன் தியாகராஜ தேசிகர்

18) தில்லி

19) இடும்பன்

20) வீரபாகு

21) ஆறு.

22) வில் ஏந்தியுள்ளான்

23) சுவாமிமலை

24) வல்லக் கோட்டை

25) திருச்செங்கோடு

26) வைத்தீசுவரன் கோயில்

27) அமிர்தவல்லி, சுந்தரவல்லி

28) விசாகம்

29) சிதம்பர சுவாமிகள்

30) திருப்போரூர்

31) பதினெட்டு

32) ஊத்துக்காடு வேங்கடகவி

33) திருத்தணி

34) கதிர்காமம்

35) திருமுருகாற்றுப்படை

36) அண்ணாமலை ரெட்டியார்

37) பாம்பன் சுவாமிகள்

38) 'சும்மா இரு சொல்லற'

39) விராலிமலை

40) கங்கசைலம்

41) பழநி

42) காங்கேசன் துறை

43) இலஞ்சியம்

44) கபிலர் மலை

45) வியர்வை சிந்தும் வேலவன்

46) திருமுருகன் பூண்டி

47) குன்றக்குடி, திண்ணியம்

48) இல்லை.

49) திருப்பரங்குன்றம்

50) முசுகுந்தன்

# அடியார் குருபூசை நட்சத்திரங்கள்

## சித்திரை

| | |
|---|---|
| பரணி | சிறுத்தொண்டர் |
| உரோகிணி | மங்கையர்க்கரசியார் |
| திருவாதிரை | விறன்மிண்டர் |
| அத்தம் | உமாபதிசிவாசாரியார் |
| சித்திரை | இசைஞானியார் |
| சுவாதி | திருக்குறிப்புத்தொண்டர் |
| சதயம் | திருநாவுக்கரசர் |

## வைகாசி

| | |
|---|---|
| பரணி | கழற்சிங்கர் |
| பூசம் | நமிநந்தியடிகள் |
| பூசம் | சேக்கிழார் |
| ஆயிலியம் | சோமாசிமாறர் |
| மூலம் | திருஞானசம்பந்தர் |
| மூலம் | முருகர் |
| மூலம் | திருநீலநக்கர் |
| மூலம் | திருநீலகண்டயாழ்ப்பாணர் |

## ஆனி

| | |
|---|---|
| மகம் | மாணிக்கவாசகர் |
| பூரம் | அமர்நீதியார் |
| இரேவதி | கலிக்காமர் |

## ஆடி

| | |
|---|---|
| கார்த்திகை | மூர்த்தியார் |
| கார்த்திகை | புகழ்ச்சோழர் |
| திருவாதிரை | கூற்றுவர் |
| சித்திரை | பெருமிழலைக்குறும்பர் |
| சுவாதி | சுந்தரமூர்த்தி |
| சுவாதி | சேரமான் பெருமாள் |
| கேட்டை | கலியர் |
| கேட்டை | கோட்புலியர் |

## ஆவணி

| | |
|---|---|
| பூசம் | செருத்துணையார் |
| ஆயிலியம் | புகழ்த்துணையார் |
| ஆயிலியம் | அதிபத்தர் |
| மகம் | இளையான்குடிமாறர் |
| அநுடம் | குலச்சிறையார் |
| மூலம் | குங்கிலியக்கலயர் |

## புரட்டாசி

| | |
|---|---|
| அச்சுவினி | உருத்திரபசுபதியார் |
| உரோகிணி | திருநாளைப்போவார் |
| சதயம் | நரசிங்கமுனையரையர் |
| உத்தராடம் | ஏனாதிநாதர் |

## ஐப்பசி

| | |
|---|---|
| அச்சுவினி | திருமூலர் |
| பரணி | நெடுமாறர் |
| கார்த்திகை | இடங்கழியர் |
| பூசம் | சத்தியார் |
| சுவாதி | மெய்கண்டார் |
| அநுடம் | பூசலார் |
| மூலம் | ஐயடிகள் காடவர்கோன் |

## கார்த்திகை

| | |
|---|---|
| கார்த்திகை | கணம்புல்லர் |
| உத்திரம் | மெய்ப்பொருளார் |
| அத்தம் | ஆனாயர் |
| மூலம் | மூர்க்கர் |
| பூராடம் | சிறப்புலியார் |

## மார்கழி

| | |
|---|---|
| திருவாதிரை | சடையர் |
| உத்திரம் | இயற்பகையார் |
| சுவாதி | மானக்கஞ்சாறர் |
| பூராடம் | சாக்கியர் |
| இரேவதி | வாயிலார் |

## தை

| | |
|---|---|
| மிருகசீரிடம் | கண்ணப்பர் |
| திருவாதிரை | அரிவாட்டாயர் |
| உத்திரம் | சண்டேசுரர் |
| விசாகம் | திருநீலகண்டர் |
| சதயம் | அப்பூதியடிகள் |
| இரேவதி | கலிக்கம்பர் |

## மாசி

| | |
|---|---|
| அத்தம் | எறிபத்தர் |
| பூராடம் | காரியார் |
| சதயம் | கோச்செங்கட்சோழர் |

## பங்குனி

| | |
|---|---|
| உரோகிணி | நேசர் |
| திருவாதிரை | கணநாதர் |
| பூசம் | முனையடுவார் |
| சுவாதி | காரைக்காலம்மையார் |
| சதயம் | தண்டியடிகள் |





திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் நடத்தி வரும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அறங்காவலர் பெருமக்கள், ஆலய நிர்வாக அதிகாரி - உதவி ஆணையாளர் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.**, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.